விடாமுயற்சி

இன்றிரவு இங்குள்ள இந்த அருமையான கூட்டத்தாருக்கும், சகோதரி வெப்ஸ்டர் மற்றும் சகோதரர் கிரீனுக்கும், மற்றும் கூட்டத்தினர் யாவருக்கும், இந்தச் சபையின் அங்கத்தினர்களுக்கும் வாழ்த்துக்கள். கர்த்தருடைய வீட்டிற்கு வருவது எனக்கு எப்பொழுதுமே ஒரு சிலாக்கியமாயிருக்கிறது, அதன்பின்னர், இன்றிரவு அவருடைய ஃபோர்ஸ்கொயர் சபைகளில் ஒன்றில் மீண்டும் திரும்பவும் இருப்பேன்.

2 அநேக ஆண்டுகளுக்கு முன்பு நான் லாஸ் ஏஞ்சல்ஸுக்கு வந்தபோது எனக்கு நினைவிருக்கிறது. நான் சகோதரி மக்பெர்ஸனைக் குறித்து கேள்விப்பட்டிருந்தேன், ஆனால் நான் வழியில் வருவதற்கு முன்பே அவள் பொன் படிக்கட்டுகளில் ஏறியிருந்தாள். நான் முதன்முறையாக லாஸ் ஏஞ்சல்ஸ் சென்றபோது, நான் ஃபாரஸ்ட் லான் என்ற இடத்திற்கு சென்றேன். அவள் அங்கே அடக்கம் பண்ணப்பட்டாள் என்று நான் கேள்விப்பட்டேன், நான் போய் அவளுடைய கல்லறையண்டை நின்று, என்னுடைய தலையை வணங்கி, ஒரு உன்னதமான வாழ்க்கைக்காகத் தேவனுக்கு நன்றி செலுத்தினேன். அது முதற்கொண்டு, நான் மிஷனரி ஊழியம் செய்த ஏறக்குறைய ஒவ்வொரு தேசத்திலும் ஃபோர்ஸ்கொயர் என்ற பலகையை நான் கண்டிருக்கிறேன். நான் ஆலயத்தில் அவளுடைய காத்திருப்பு அறையில் காத்திருக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறேன். அவள் பிரசங்க பீடத்திற்கு செல்வதற்கு முன்பு, அவளுக்கு அங்கே ஒரு அறை இருந்தது. ஆலயத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது, நான் அநேக இரவுகள் அங்கே அமர்ந்திருக்கிறேன், அவள் பிரசங்க பீடத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பு எத்தனை மணி நேரம் தியானித்திருப்பாள் என்பதையும், தேவனுடைய வார்த்தையைத் திறந்து கொடுக்கும் புனிதத்தன்மையைக் குறித்தும் எண்ணிப் பார்த்தேன். அந்தச் செய்தியை உயிர்ப்புடன் வைத்திருக்க முயற்சிக்கும் சில பின்தொடர்பவர்களுடன், இன்று இரவு இங்கு இருப்பதற்கு: தேவன் உங்களோடு இருந்து, உங்களை ஆசீர்வதிப்பாராக.

3 அதன்பின்னர் சகோதரன் கிரீன், ஒரு விலையேறப்பெற்ற, அருமையான நண்பர், சகோதரன் மற்றும் சகோதரி கிரீன் அவர்களோடு திரும்பி வருவதை நான் விரும்புகிறேன். சற்று முன்னர் நான் அங்குச் சென்றிருந்தபோது, அவரைச் சந்தித்தபோது, நான்—நான் அந்தப் பாடலில் உள்ள செய்தியை எவ்வளவு ரசித்தேன் என்று அவரிடம் கூறினேன், அன்றொரு நாள், அங்கே வர்த்தக புருஷர்களிடம், *இயேசுவின் நாமம்* அல்லது ஏதோ ஒன்றைக் குறித்து, அவர் அதை அழைத்தார். அவர்கள் அதை இன்னும் பதிவு

செய்யவில்லை. நான் அவரிடம், “நான் முதல் வாடிக்கையாளராக இருக்கட்டும்,” என்று கூறினேன். அது அப்பேர்ப்பட்ட ஒரு அழகான பாடலாயிருந்தது.

4 இன்றிரவு நான் கீழே இறங்கியதும், அவர்கள் எனக்காகப் பாடலாம் என்று நான் நினைத்தேன், மற்றும்—மற்றும் என்னுடைய மனைவியும் பிள்ளைகளும் அதைக் கேட்க அங்கே பின்னால் இருக்கிறார்கள். அவர்களும் கூட அதை ரசித்தார்கள் என்று நான் நிச்சயம் நம்புகிறேன். அவருடைய சத்தம் அல்ல...அது உண்மையாகவே நம்முடைய இடத்தில் நன்கு பழக்கமானது. நான் அவருடைய அநேக ஒலிப்பதிவுகளை வைத்துள்ளேன். நான் மிகவும் மோசமாக உணரும்போது, நான் உள்ளே சென்று, அந்த ஒலிப்பதிவு தட்டுகளில் ஒன்றைப் போடுவேன், நான் அவருடைய முழு பதிவுகளையும் போட்டு, சும்மா உட்கார்ந்து அவற்றைக் கேட்பேன். அங்கே பின்னால் உள்ள மனைவிக்கு நான் கூற விரும்புகிறேன், அவைகளில் இன்னும் சிலவற்றை நான் வைத்துள்ளேன். நான் நிச்சயமாக அவற்றை ரசிக்கிறேன். அவை...அந்த நற்செய்திப் பாடல்களைக் கேட்பதும், அவை ஏதோ இயந்திரத்தனமாகப் பயிற்சி பெற்ற குரலிலிருந்து பாடப்படாமல், ஒரு உண்மையான கிறிஸ்தவரின் இதயத்திலிருந்து பாடப்படுகின்றன என்பதை அறிவதும் ஓர் இளைப்பாறுதலின் புகலிடம்.

5 இன்றிரவு இன்னும் சிலவற்றை அவர் அங்கு வைத்திருப்பதாக அவர் என்னிடம் கூறினார். என் மனைவியும் மற்றவர்களும் அதைச் சரிபார்த்து, நம்மிடம் இல்லாத ஏதேனும் அவரிடம் இருக்கிறதா என்று பார்த்து, அவற்றை நிச்சயம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவர்கள் அவைகளை முன் அறையில் வைத்திருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். அவர்கள்...

6 உங்களுக்குத் தெரியும், முக்கியமான காரியம், நான் பாடுவதைக் குறித்து என்ன நினைக்கிறேனோ, நான் இவைகளை விரும்புகிறேன். நான் பயிற்றுவிக்கப்பட்ட குரல்களை விரும்புகிறேன், ஆனால் நான் அதிகமாகப் பயிற்சி பெற்ற குரலை விரும்புகிறதில்லை. அப்பொழுது நீங்கள் முகம் நீலமாக மாறும் வரை எவ்வளவு நேரம் மூச்சை அடக்கி வைக்கிறீர்கள் என்று பாருங்கள், அப்போதும் நீங்கள் ஒன்றும் பேசப் போவதில்லை. ஆனால் நான் நல்ல பழைய பெந்தேகோஸ்தே பாடலை விரும்புகிறேன், அங்கே நீங்கள் மனம் திறந்து பாடுவீர்கள். நான்—நான் அதை விரும்புகிறேன். சகோதரன் கிரீனுக்கும், சகோதரி கிரீனுக்கும் அது உண்டு. எனவே அது இந்தப் பாடற் குழுவினர் போன்றவர்களால் ஆதரிக்கப்படுகிறது என்பதை நாம் அறிவோம். அதை அறிந்து கொள்வது மிகவும் அருமையாயுள்ளது, இந்தக் காரியங்களை, நாம் அவைகளை பற்றிக் கொள்ள முடியும்.

7 இப்பொழுது, சகோதரன்—சகோதரன் கிரீனும் நானும், முதலில் சந்தித்தது, நான் நம்புகிறேன், என்னால் அதைக் குறித்து

நினைவிருக்கும் வரை, கான்சாஸ் நகரத்தில் நாம் வழக்கமாகத் தொடர் கூட்டங்களை நடத்திக் கொண்டிருந்தபோது என்று நான் நினைக்கிறேன். நான் எப்படி வழக்கமாகப் புறப்படுவேன்... அவர்கள், "சரி, இன்னும் வருவதற்கான நேரம் வரவில்லை" என்றனர். ஆனால் நான் என்னுடைய காரில் காத்திருப்பேன், அவரும்—அவரும் சகோதரியும் பாடிக்கொண்டிருந்தபோது, அந்தப் பாடலை நான் நிச்சயம் கேட்க வேண்டும் என்று விரும்பினேன்.

8 எனவே நான் அங்கு அவரிடம் கூறினேன், நான், "நான் நம்புகிறேன், அதாவது, சில நாட்களில் நான் ஆற்றைக் கடக்கும்போது..." என்றேன்.

9 நான் பாடுவதை மிகவும் விரும்புகிறேன்! என்னால்—என்னால் பாட முடியாது. அவ்வளவுதான். நான் எப்பொழுதுமே பாட விரும்புவதுண்டு. என்னால்—என்னால் பாட முடியாது. நான் வழக்கமாகச் சபையில் ஒரு பாடலைப் பாட முயற்சிப்பதுண்டு, "ஒரு பண்டைய நாகரீகமான இடத்தில் பண்டைய நாகரீகமான கூட்டம்" என்ற பாடலைப் பாடுவதுண்டு. நான் அதையெல்லாம் குழப்பிவிடுவேன். நான் வீட்டிற்கு வந்ததும், நான், "தேனே, நான் அதை மீண்டும் ஒருபோதும் முயற்சிக்கமாட்டேன், எனவே எனக்கு உதவி செய்யும்" என்று நான் என் மனைவியினுடைய கரத்தைப் பற்றிக் கொள்வேன். நான்...எல்லோரும் குழப்பமடைந்துள்ளனர்.

10 ஆனால் இந்நாட்களில் ஒன்றில் நான் பாடப் போகிறேன். நான் எப்பொழுதும் நினைத்ததுண்டு, ஒரு வேளை மலைப்பாதையில், அங்கே சிங்காசனத்தை ஒட்டி ஜீவ நதி ஓடிக்கொண்டிருக்கும்; மீட்கப்பட்ட அனைவருடைய மகத்தான பாடகர் குழுவும், அந்த மகத்தான சத்தங்கள் அந்த மலையின் மேல், பாடிக்கொண்டே இருக்கும். மற்றொரு பக்கத்தில் ஒரு சிறிய நிழல் தரும் மரம் இருக்கும் என்று நான் நம்புகிறேன். நீங்கள் என்னைக் காண விரும்பினால், அங்கே சுற்றி வாருங்கள். நான் அங்கே அமர்ந்து அவைகளைக் கேட்டுக் கொண்டிருப்பேன்.

11 ஆனால் அதன்பின்னர் நீங்கள் உங்களுடைய அரண்மனையை அடைந்து, ஒரு நாள் காலையில் வெளியே உங்களுடைய அரண்மனையின் தாழ்வாரத்தில் நடந்து செல்லும்போது, எங்கோ கீழே, அங்கே காடுகளில், எங்கோ ஒரு சிறு குடில் கட்டப்பட்டுள்ளது, உங்கள் தாழ்வாரத்திற்கு வெளியே நடந்து வர, யாரோ ஒருவர், "வியக்கத் தக்க கிருபை! எவ்வளவு இனிமையான சத்தம்," என்று பாடுவதைக் கேட்டு, நீங்களோ, "பண்டைய சகோதரன் பிரான்ஹாம் வந்தடைந்து விட்டார், ஏனென்றால் அவர் அங்கே இருக்கிறார். அவர்—அவர் இறுதியாக அங்கு வந்துவிட்டார்" என்பீர்கள். எனவே என்னால் அப்பொழுது பாட முடியும். அதுவரைக்கும் நான் கர்த்தருக்கு ஒரு சந்தோஷ சத்தமிட வேண்டும்.

12 நாம் மகிழ்ச்சியாயிருக்கவில்லையா? நாம் கவலைப்பட வேண்டிய எந்த ஒரு காரியமும் இல்லை, ஒரு காரியமும் இல்லை.

நாம் கிறிஸ்துவுக்குள் நங்கூரமிட்டுள்ளோம், உன்னதங்களில் உட்கார்ந்து கொண்டு, இப்பொழுதே எடுத்துக் கொள்ளப்படுதலின் கிருபையில் எடுத்துக் கொள்ளப்பட்டு, கிறிஸ்து இயேசுவுக்குள் உன்னதங்களில் அவருடைய பிரசன்னத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். மரணமே நம்மைத் தொட முடியாது. நங்கூரமிடப்பட்டு, எதுவுமே நம்மைத் தொல்லைப்படுத்த முடியாது, வெறுமனே பாதுகாப்பாக இருந்து, அவருடைய வருகைக்காகக் காத்திருப்போம். நாம் இதற்காக நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

13 இப்பொழுது, ஆராதனைக்குப் பிறகு, இன்றிரவு நான் சுமார் நூற்றைம்பது மைல்கள் தூரம் காரோட்டிச் செல்ல வேண்டியதாயுள்ளது. இதைப் போன்ற ஒரு அருமையான கூட்டத்தோடு, அதை ஆரம்பிக்க எனக்கு நீண்ட நேரமாகிறது, அதன்பின்னர் நிறுத்தப்படுவதற்கு அதைவிட இருமடங்கு நேரமாகும். எனவே நான் கூற நினைத்ததை முடிந்தளவு துரிதமாகக் கூற முயற்சிப்பேன். இந்தச் அருமையான சபையில், இன்று இரவு அவருடைய கிருபையைப் பற்றிய எனது சாட்சியைப் அளிக்க, எனக்கு இந்தத் தருணத்தை அளித்த போதகர் கூட்டாளிகள் மற்றும் எல்லோருக்கும், எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

14 நான் கொஞ்ச காலத்திற்கு முன்னர் தெற்கு மலையின் மேல் ஏறி, அந்தப் பள்ளத்தாக்கை நோக்கிப் பார்த்தேன். நான் ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பள்ளத்தாக்கில் பிரவேசித்தபோது, அதைக் குறித்து நான் எண்ணிப் பார்த்தேன். இந்த நகரம் எப்படியாய் வளர்ந்திருக்கிறது, இங்கே மாரிகோபா பள்ளத்தாக்கு முழுவதும் பரவியிருக்கிறது. நீங்கள் காணக்கூடிய தூரத்தில், நகரம் உள்ளது. நான் அங்கே என்னுடைய மனைவியோடு உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்பொழுது நான், "தேனே, உனக்குத் தெரியுமா, ஒரு வேளை சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர், தேசத்தினூடாகச் சுற்றித்திரிந்த சருகு நாய்கள் மற்றும் காட்டுப் பன்றிகள் போன்ற விலங்குகள் தவிர வேறொன்றும் இங்கு ஓடவில்லை. அதன்பின்னர் மனிதன் உள்ளே வந்து கட்டத் துவங்கினான். அப்பொழுது நாகரீகம் பரவ ஆரம்பித்தது. அப்பொழுது பாவமும், வன்முறையும் தோன்றின" என்றேன்.

15 நான், "இது ஒரு அற்புதமான இடமாக இருக்குமல்லவா?" என்று எண்ணினேன். என்றாவது ஒரு நாள் நான் பீனிக்ஸில் வசிக்க விரும்புகிறேன் என்று நான் எப்பொழுதும் நினைத்திருக்கிறேன். அதன்பின்னர் நான்...பள்ளத்தாக்கை நோக்கிப் பார்த்தபோது, கிட்டத்தட்ட, என் இருதயத்தில், அழுவது போன்ற உணர்வை என்னால் உணர முடிந்தது, அது பாவம் இல்லாமல் இங்கே இருக்குமானால் அது என்ன ஒரு அழகான ஸ்தலமாயிருக்கும்.

16 அவர்கள் எப்படியாய் பாலைவனத்தை ஆக்கிரமித்து அதை ஒரு—ஒரு வாழ்க்கைத் தங்குமிடமாக மாற்றியிருக்கிறார்கள்!

இன்றைக்கு நாம் கேமல்பேக் மலைத்தொடரின் தலைப்பகுதியில் பயணம் செய்து கொண்டிருந்தோம், அங்கே அழகான வீடுகள் இருந்தன, கிட்டத்தட்ட நீங்கள் பரதீசுக்குள்ளாகச் செல்வது போல. அப்பொழுது அது அழகாக இருக்கும், ஆனால் பாவம் இங்கே எங்கும் உள்ளது: மதுபானக் கூட்டுகள், ஒழுக்கக்கேடு, தவறான ஒவ்வொரு காரியமும், எல்லாவிதமான உபாயங்களையும், சத்துருவின் கண்ணிகளையும், மானிட ஆத்துமாக்களைக் கண்ணியில் சிக்க வைக்கின்றனர்.

என் மனைவி, "அப்படியானால் பில்லி, நீர் ஏன் இங்கு இருக்கிறீர்?" என்று கேட்டாள்.

17 நான், "தேனே, அது இருளாக இருக்கிறது. ஆனால், உனக்குத் தெரியும், அங்கே அந்த இருளினூடாக, அங்கே சிறு ஒளிப் புள்ளிகள் உள்ளன. அது தேவனால் தெரிந்து கொள்ளபட்டவர்கள். நான் என்னுடைய தோளை அவர்களுடைய தோளோடு சேர்த்து, என்னுடைய இருதயத்தை அவர்களுடைய இருதயத்தோடு சேர்த்து, அவர்களுடைய சத்தத்தோடு என்னுடைய சத்தமும், இருளுக்கு விரோதமாய்க் கூக்குரலிடும்" என்றேன்.

18 அதனால்தான் நான் மீண்டும் இங்கே பீனிக்ஸில் இருக்கிறேன். பரலோகத்தின் தேவன் நமக்கு உதவி செய்வாராக. இரவு முடிந்த பிறகு, நம்முடைய சிறு கூட்டம் நகரத்தினூடாகக் கடந்து சென்று கொண்டிருக்கிறது, சபையிலிருந்து சபை, முழு சுவிசேஷத்தின் எல்லா ஸ்தாபனங்களின் மத்தியிலும், அவர்கள் ரமாதாவில் நடந்த வர்த்தகர்களின் தொடர் கூட்டத்தை முடித்துவிட்டு, நாம் இங்கே முழுவதும் ஒரு அடையாளத்தை விட்டுச் செல்வோம் என்று நான் நம்புகிறேன், அதாவது சிதறடிக்கப்பட்டிருக்கிற சிறிய வெளிச்சத்தில், அநேக ஆத்துமாக்கள் கிறிஸ்துவைக் கண்டடைவார்கள் என்றும், விசுவாசமுள்ள அநேக சுகவீனமான ஜனங்கள் சுகமடைவார்கள் என்று நான் நம்புகிறேன். நாம் ஏற்கனவே, பலன்களைக் காணத் துவங்கியிருக்கிறோம்.

19 இன்றிரவு, இந்த இடத்தின் இந்தப் பாதுகாப்பின் கீழ், இந்தத் தங்குமிடத்தின் கீழ் யாராவது இங்கு வருவாரானால், பாடலில், சாட்சியில், அல்லது வார்த்தையை வாசிப்பதில், அல்லது ஏதோ ஒரு காரியத்தில் கூறப்பட்டு, அது நீங்கள் உள்ளே வருவதைக் காட்டிலும் ஒரு வித்தியாசமான நபராக உங்களை வாசலை விட்டு வெளியே செல்லச் செய்யும் என்று நான் நம்புகிறேன். அதைச் செய்ய எங்கள் எல்லோருக்கும் உதவி செய்யும்.

20 இப்பொழுது நாம் வார்த்தையை அணுகுவதற்கு முன்பு, ஜெபத்தின் வழியின் மூலம் நாம் ஆக்கியோனை அணுகுவோம். நாம் சற்று நேரம் நம்முடைய தலைகளை வணங்குவோமாக. நம்முடைய தலைகளும் இருதயங்களும் தேவனுக்கு முன்பாக வணங்கியிருக்கையில், இன்றிரவு ஜனங்கள் மத்தியில் நீங்கள்

விசேஷித்த ஒரு காரியத்தை உடையவர்களாயிருந்தால், உங்களுக்கு உதவி செய்யும்படி கர்த்தரிடம் நீங்கள் கேட்க விரும்புகிறீர்களா? அப்படியே உங்களுடைய கரத்தை உயர்த்துங்கள். உங்களுடைய இருதயத்தின் ஆழத்தில், "கர்த்தாவே, அது என்னவென்று நீர் அறிந்திருக்கிறீர்" என்று கூறுங்கள். உங்களுக்கு நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

21 எங்களுடைய பரலோகப் பிதாவே, "நீங்கள் என் நாமத்தில் பிதாவினிடத்தில் எதைக் கேட்டாலும், அவைகள் அருளப்படும்" என்று அவர் வாக்குத்தத்தம் செய்ததை அறிந்திருக்கிறபடியால், கர்த்தராகிய இயேசு என்னும் அந்தப் போதுமான நாமத்தில் நாங்கள் இப்பொழுது வந்து கொண்டிருக்கிறோம். நாங்கள் தவறிழைத்திருக்கிறோம் என்பதை அறிக்கையிடவே, முதலாவது வருகிறோம். நாங்கள் தவறு செய்திருக்கிறோம். எங்களில் நல்லவர்கள் ஒருவரும் இல்லை. நாங்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் எங்களுடைய பாவங்களை அறிக்கையிட வந்து கொண்டிருக்கிறோம். நாங்கள் மன்னிப்பு கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

22 இன்றிரவு உயர்த்தப்பட்ட ஜனங்களின் கரங்களை நீர் கண்டீர், அந்தக் கரத்தின் கீழிருந்ததையும், அவர்களுக்கு என்ன தேவையாயிருந்தது என்பதையும் நீர் அறிந்திருக்கிறீர். நான் அவர்களுடைய ஜெபத்தோடு என்னுடைய ஜெபத்தையும் ஏறெடுத்து, அதை உம்முடைய பலிபீடத்தின் மேல் வைத்து, கர்த்தாவே, நீர் இரக்கத்தை அருளி, ஒவ்வொரு வேண்டுகோளுக்கும் பதிலளிப்பீர் என்று இரக்கத்திற்காக வேண்டிக்கொள்கிறோம்.

23 நாங்கள் இந்தச் சபைக்காகவும், இதனுடைய போதகர்களுக்காகவும், சபையோர் எல்லோருக்கும், எல்லா உதவிக்காரர்களுக்கும், தர்மகர்த்தாக்களுக்கும், மற்றும் வந்துள்ள எல்லோருக்காகவும் உமக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறோம். கர்த்தாவே, அவர்களை ஆசீர்வதியும். நீர் எங்களைச் சந்திக்கவில்லையென்றால், எங்களுடைய கூட்டங்களும், ஒன்று கூடுவதும் முற்றிலும் வீணானதாயிருக்கும் என்பதை நாங்கள் அறிவோம்.

24 எனவே பரலோகப் பிதாவே, இப்பொழுது நீர் எங்களோடு இருக்கிறீர் என்ற உறுதியை நாங்கள் பெற்றிருக்க வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம். ஓ, கர்த்தாவே, இரவு முழுவதும் தொடர்ந்து எங்களோடிரும். எங்களுக்கு உதவி செய்யும். தற்செயலாக, வீதியிலிருந்து அல்லது வேலிகள் மற்றும் உலகத்தின் சுற்றுப்பாதைகளிலிருந்து வந்தவர்கள், தங்களுடைய ஜீவியத்தில் உம்மைக் குறித்து அலட்சியமாக இருந்தவர்கள், இந்த இரவிலே அவர்கள் தேவனுக்கு முழுமையாக "ஆம்" என்று கூறி சரணடைந்து, இயேசு கிறிஸ்துவுக்கு தங்களை ஒப்புக் கொடுப்பார்களாக.

25 எங்கள் மத்தியில் சுகவீனமுள்ளவர்களாயிருந்தால், கர்த்தாவே, நீர் எல்லா சுகவீனத்தையும் சுகப்படுத்துகிற மகத்தான வைத்தியராயிருக்கிறீர்.

26 சுகவீனமும், பயங்கரமான இருளும் பூமியை மூடிக்கொண்டிருக்கையில், நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த நாளைக் குறித்து நாங்கள் நினைத்துப் பார்க்கிறோம். ஆனால் நாங்கள் மீண்டும் சிந்திக்கையில், நீர் உம்முடைய ஜனங்களை வழி நடத்திக் கொண்டிருந்தபோது, மோசே அவர்களை எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு அவர்களை அழைத்துச் சென்று, நாற்பது வருட பயணத்தில், அவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசித்தபோது, அவர்களுக்குள்ளே பலவீனமான ஒருவனும் இருக்கவில்லை.

27 நாற்பது நீண்ட ஆண்டுகளாக அத்தனை மக்களையும் ஆரோக்கியமாக வைத்திருந்த, மோசே வைத்திருந்த அந்த மருந்துச் சீட்டை இன்று இரவு எத்தனை மருத்துவர்கள் ஆராய்ந்து பார்க்க விரும்புவார்கள். அதே சமயத்தில் நீர் அதை மறைக்கவில்லை. நீர் அதை எங்கள் எல்லோருக்கும் தெரியப்படுத்தியிருக்கிறீர், அது இங்கே பக்கங்களில் மிக எளிமையாக எழுதப்பட்டுள்ளது. “உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிற கர்த்தர் நானே.” கர்த்தாவே, நாங்கள் இன்றிரவு சுகவீனமாய் உள்ளவர்களும், தேவையிலிருப்பவர்களும் உணருவோமாக, நீர் தான் பரிகாரம், இரட்டிப்பு சுகமளித்தல் என்பதைத் தவிர வேறெந்த வியாதியும் கிடையாது என்பதை அறிந்திருக்கிறோம்.

28 உம்முடைய வார்த்தையின் வாசிப்பை ஆசீர்வதியும். எங்களுடைய இருதயங்கள் கூட்டத்தின் தீவிரத்தன்மைக்கு இப்பொழுது இறங்கி வருவதாக. சுவிசேஷப் பாடல், சாட்சிகள் முதலியவற்றால் எங்கள் உள்ளங்கள் மகிழ்ச்சியால் நிறைந்திருப்பதால், நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். இப்பொழுது நாங்கள் உமது வார்த்தையைக் கேட்போமாக. பிதாவே, எங்களிடத்தில் பேசி, சாயங்காலத்திற்காக ஆயத்தம் செய்யப்பட்டுள்ள இந்தச் சில குறிப்புகளை ஆசீர்வதியும், நாங்கள் இதை அவருடைய நாமத்தில் அவருடைய மகிமைக்காக வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

29 ஆராதனைக்கு வரும் பலருக்கு, போதகர் சொல்வதையோ அல்லது வேத வாக்கியங்களிலிருந்து வாசிப்பதையோ எப்போதும் குறித்துக்கொள்ளப் விரும்புவார்கள். நீங்கள் அவ்வாறு செய்தால், நீங்கள் இன்றிரவு என்னோடு பரிசுத்த மத்தேயுவின் சுவிசேஷப் புத்தகத்தில் 15-ம் அதிகாரம் 21-ம் வசனம் முதல் 28-ம் வசனம்வரை காணப்படுகின்ற ஒரு சிறு வாசிப்பிற்கு திருப்ப வேண்டுமென்று நான் விரும்புகிறேன். நான் இதை வாசிப்பேன்.

பின்பு, இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, தீரு, சீதோன்—சீதோன் பட்டணங்களின் திசைகளுக்குப் போனார்.

அப்பொழுது, அந்தத் திசைகளில் குடியிருக்கிற கானானிய ஸ்திரீ ஒருத்தி அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என்று... கூப்பிட்டாள்.

அவளுக்குப் பிரதியுத்தரமாக அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து: இவள் நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகிறாளே, இவளை அனுப்பிவிடும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள்.

அதற்கு அவர்: காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல என்றார்.

அவள் வந்து: ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யும் என்று அவரைப் பணிந்துகொண்டாள்.

அவர் அவளை நோக்கி: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார்.

...அவள்: மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள்.

இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்.

30 நான் இதை ஒரு பாடப் பொருளாக அழைக்க வேண்டுமானால்: *விடாமுயற்சி* என்ற பொருளின் பேரில் அல்லது ஒரு சில நிமிடங்களுக்கு, நான் சற்று நேரம் பேச விரும்புகிறேன்.

31 திருமதி மக்பெர்ஸனும் சபையும் எப்பொழுதுமே தெய்வீக சுகமளித்தலுக்காக மிகவும் தீரமாக நின்றதால், நான் நினைத்தேன், தெய்வீக சுகமளித்தலை பிரசங்கிக்காமல் நம்மால் முழு சுவிசேஷத்தை பிரசங்கிக்க முடியாது, ஏனென்றால் அது சுவிசேஷத்தின் ஒரு பாகமாக உள்ளது.

32 நான் ஒரு சிறுவனாக இருந்தபோது, *லைஃப்* அல்லது *லுக்*, அல்லது அது போன்ற பத்திரிகைகளில் ஒன்றில் ஒரு கட்டுரை படித்தது, எனக்கு நினைவிருக்கிறது. நான் அப்பொழுது ஒரு வாலிபப் பையனாயிருந்தேன். அவர்கள் திருமதி மக்பெர்ஸன் தெய்வீக சுகமளித்தலைப் பிரசங்கிப்பதைக் குறித்து அற்பமாகக்

காண்பித்தனர், அவர்கள் அவளுக்கு ஒரு—ஒரு தந்திரம் இருந்ததாகக் கூறினர். மேலும், "கழுத்து வீக்கம் இருந்த பெண்கள்; அவள் தன் விரலுக்குக் கீழே ஒரு ஊசியை வைத்துக்கொள்ள, அந்தப் பெண்கள் தங்கள் ஆடைக்குக் கீழே ஒரு பலூனை வைத்துக் கொண்டார்களாம். அதன்பின்னர் திருமதி மெக்பெர்ஸன் அந்த ஸ்திரீயின் மீது கைகளை வைத்து, அந்தப் பலூனுக்குள் ஊசியைப் பொருத்தி, அந்தப் பலூனின் காற்றை வெளியேற்றிவிடுவாராம்.

33 நான் ஒரு பாவியாயிருந்தேன், ஆனால் அப்படிப்பட்ட ஒரு காரியத்தைச் சிந்திப்பதற்கு, அதைக் காட்டிலும் மேலான உணர்வு எனக்கு இருந்தது. அந்த ஊசி பலூனில் சிக்கினால், அது வெடித்து விடும். எனவே நான், "அந்த ஸ்திரீ துன்புறுத்தலை அனுபவித்துக் கொண்டிருக்கிறாள் என்பதில் சந்தேகமேயில்லை" என்றேன். அதன்பின்னர், நான் திராட்சைத் தோட்டத்தில் ஒரு ஊழியக்காரனானது முதற்கொண்டு, அவள் எதற்காக நிற்க வேண்டியதாயிருந்தது என்பதை நான் உணருகிறேன். சத்தியத்திற்காக நிற்கிற நீங்கள் எப்பொழுதுமே சத்துருவால் வெறுக்கப்படுகிறீர்கள்.

34 *விடாமுயற்சி* என்ற சொல்லுக்கு, "விடாப்பிடி" என்று வெப்ஸ்டரின் கூற்றுப்படி, பொருள்படுகிறது என்று நான் நினைக்கிறேன். *விடாமுயற்சியுள்ளவர்களாயிருப்பது*, "ஒரு இலக்கை வைப்பதில் விடாமுயற்சியுடன் இருத்தல்." பூமியில் உள்ள ஒவ்வொரு நபரும், அல்லது பூமியில் எப்போதாவது வாழ்ந்த ஒவ்வொரு நபரும், எதையாவது சாதித்தவர்கள்... எதையாவது பெரிதாகச் சாதித்தவர்கள், விடாமுயற்சியுடன் இருந்திருக்க வேண்டும். முதலாவதாக, உங்களுடைய விசுவாசம் எதில் நீங்கள் நங்கூரமிடப்பட்டிருக்கிறீர்கள் என்று நீங்கள் நிச்சயமுடையவர்களாயிருக்க வேண்டும்.

35 இப்பொழுது, விசுவாசம் என்பது அவ்வளவு எளிதில் மிதக்கக்கூடிய ஒரு காரியமல்ல, ஒருவிதமான ஒரு... தெருமொழியில் சொல்வதானால், நாங்கள் அதை ஒரு மாயாஜாலம் என்போம். அது உறுதியாயிருக்கிற ஏதோ ஒரு காரியத்தின் மேல் வைக்கப்படும்போது மாத்திரமே விசுவாசமானது அதனுடைய— அதன் சரியான ஸ்தானத்தை உடையதாயிருக்க முடியும்.

36 நான் உங்களை வெளியே போய், உங்களுடைய கரத்தை அந்த மரத்தின் மேல் வைத்து, சுகமடையும்படி உங்களிடம் கூறியிருந்தால், நீங்கள் அதைச் சந்தேகிக்க முடியும். எனவே, ஏன்? நமக்கு எதற்கும் எந்தப் பின்னணியும் கிடையாது. நீங்கள் என்னுடைய வார்த்தையை மாத்திரமே பெற்றிருப்பீர்கள். இங்கே பள்ளத்தாக்கில் உள்ள குறிப்பிட்ட தண்ணீரில் கழுவுதல் உங்களுக்குச் சுகத்தைக் கொண்டு வரும் என்று நான் உங்களிடம் கூறியிருந்தால், அது நீங்கள் என்மேல் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தீர்கள் என்பதைப் பொறுத்ததாயிருக்கும்.

37 “விசுவாசம் கேள்வியினாலே வரும்.” எதைக் கேட்பதனால்? “தேவனுடைய வார்த்தையையே.”

38 ஆகையால், இது தேவனுடைய வார்த்தையாயிருந்தால், அது என்ன போதிக்கிறதோ, அதன் பேரில் நாம் தங்கியிருக்க முடியும். தேவனால் மாற முடியாது. தேவன் என்றென்றைக்கும் தேவனாகவே இருக்க வேண்டும். அவருடைய வார்த்தை எந்தக் காலத்திலும் உண்மையாயிருந்ததைப் போலவே இக்காலத்திலும் உண்மையாயிருக்க வேண்டும்.

39 இப்பொழுது, நாம் முடிவானவர்களாய் இருக்கிறோம். நாம் இந்த வருடம் ஒன்றைக் கூறலாம், ஒருகால் நாளையும் கூட அதை மாற்ற வேண்டியிருக்கலாம். ஏனென்றால், நாம் முடிவானவர்களாயிருக்கிறபடியால், நாம் மிகவும் நிச்சயமுடையவர்களாயிருக்கவில்லை. நாம் வெறுமனே யூகித்துக் கொண்டிருக்கிறோம். *யூகிக்கிறது* என்றால் “அதிகாரம் இல்லாமல் சாகசம் செய்வது” என்று பொருள்.

40 ஆனால் தேவன் எந்தக் காரியத்தையாவது கூறும்போது, அது பரிபூரணமாயிருக்கிறது. அவர் அதை மாற்ற வேண்டியதில்லை. “ஆபிரகாம் தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவனை துதித்து, வல்லவனானான். ஏனென்றால் அவர் வாக்குத்தத்தம் செய்திருந்ததை நிறைவேற்றவோ, அல்லது காத்துக்கொள்ளவோ, அல்லது செய்யவோ வல்லவராயிருந்தார் என்பதை அவன் அறிந்திருந்தான்.” அப்படியானால், தேவன் எப்போதாவது ஒரு தீர்மானத்திற்காகக் காட்சியில் அழைக்கப்பட்டால், தேவன் முதலில், செய்கின்ற தீர்மானம், அது என்றென்றும் மாறாததாய் இருக்க வேண்டும். அது ஒருபோதும் மாறவே முடியாது. அது மாற்றப்பட முடியாது, ஏனென்றால் அவர் முடிவற்றவர். முடிவில்லாததாக இருக்கும் எந்த ஒரு காரியத்திற்கும் ஒருபோதும் ஒரு துவக்கமோ அல்லது முடிவோ கிடையாது. எனவே, அடுத்த வருடம் அவர் அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, ‘நான் தவறாயிருந்தேன்’ என்று கூற முடியாது.

41 அது அவருடைய தீர்மானமாயிருந்தால், அப்பொழுது அதையே செய்யும் ஒவ்வொரு மனிதனும், ஊ, ஒரு மனிதன் அவனுடைய விசுவாசத்தின் அடிப்படையில், அதை விசுவாசிக்கும்படி, தேவன் ஒரு மனிதனுக்காகச் செய்த அதே தீர்மானத்திற்கு வருகிறான், ஒரு மனிதன் அதை விசுவாசிக்கும் ஒவ்வொரு முறையும் அவர் அதையே சந்திக்க வேண்டும். தேவன் ஒவ்வொரு முறையும், அவர் முதல் முறையாகச் செயல்பட்ட விதமாகவே செயல்பட வேண்டியவராயிருக்கிறார், அல்லது அவர் முதல் முறை தவறாகச் செயல்பட்டதாக ஆகிவிடும். தேவன் தவறாகச் செயல்படுகிறார் என்று யார் குற்றம் சாட்ட முடியும்? தேவன் தம்முடைய தீர்மானத்தில் எப்போதும் நிலைத்திருக்க வேண்டும்.

42 “நீ விசுவாசிக்கக் கூடுமானால்!” இப்பொழுது, எந்தக் காரியத்தையும் அடைய வேண்டுமானால், நீங்கள் ஒரு இலக்கை நிர்ணயித்து, “நான் இதை விசுவாசிக்கிறேன்” என்று கூறி, அதனோடு உங்களை இணைத்துக் கொள்ள வேண்டும், தொடர்ந்து நெருங்கிக் கொண்டேயிருந்து, அதற்கு நெருக்கமாக முன்னேறி, நீங்கள்...அது அங்குள்ளது என்பதை அறிந்து, அங்கே நீங்கள் வந்து கொண்டிருக்கிற ஏதோ ஒரு காரியம் உண்டு என்பதை அறிந்துகொள்வது.

43 அந்தச் சிறுவன் தன் கையில் பட்டத்தின் நூலைப் பிடித்திருந்தான் என்று அது கூறப்பட்டது போலவே. அவர் கூறினார், அந்த மனிதன், “மகனே, நீ என்ன வைத்திருக்கிறாய்?” என்று கேட்டார்.

அவன், “என்னுடைய காத்தாடி” என்றான்.

அவர், “நான் ஒரு கயிற்றைத் தவிர வேறொன்றையும் காண்கிறதில்லை” என்றார்.

அதற்கு அவன், “ஆனால் அதன் முனையில் ஒரு காத்தாடி உள்ளது” என்றான்.

அந்த மனிதன் மேலே நோக்கிப் பார்த்து, “நான் அந்தக் காத்தாடியைக் காணவில்லையே” என்றார்.

அந்தச் சிறு பையன், “நானும் அதைக் காணவில்லையே” என்றான்.

அதற்கு அவர், “சரி, நீ ஒரு காத்தாடி வைத்திருப்பது உனக்கு எப்படித் தெரியும்?” என்று கேட்டார்.

அவன், “அது முடிவிலே இழுத்துக் கொண்டிருப்பதை என்னால் உணர முடிகிறது” என்றான்.

44 பாருங்கள், அந்தவிதமாகத்தான் விசுவாசமும் உள்ளது. “விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.” நீங்கள் உங்களுடைய விசுவாசத்தை அதன் பேரில் வைத்து, அதனோடு நங்கூரமிட்டால், நீங்கள் அதற்கு வந்து கொண்டிருக்கிறீர்கள். உங்களால் அதைக் காண முடியாவிட்டாலும், அல்லது இல்லாவிட்டாலும் பரவாயில்லை, அது எப்படியும் அங்கே உள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் அதை இழுத்துக் கொண்டிருக்கிறீர்கள், அது உங்களை இழுத்துக் கொண்டிருக்கிறது. எந்த ஒரு மனிதனும் எப்பொழுதாவது பயனுள்ள எந்தக் காரியத்தையும் செய்திருந்தால், அவன் ஒரு இலக்கை நிர்ணயித்து, அதன்பின்னர் விடாப்பிடியுடன், விடாமுயற்சியுடன் இருந்தவர்களே: மகத்தான மனிதர்கள்.

45 “நமது தேசத்தின் தந்தை” என்று அழைக்கப்படும் ஜார்ஜ் வாஷிங்டன், வேலி ஃபோர்ஜுக்கு வந்தபோது, இரவு முழுவதும் ஜெபத்தில் ஈடுபட்டிருந்தார், அவரது இடுப்பளவுக்கு மேல்

பனியில் நனைந்து, பனியில் மண்டியிட்டு இருந்தார், மறுநாள் காலையில், பனிக்கட்டி நிறைந்த டெலாவேரைக் கடந்தார். ஏன்? அவர் விடாமுயற்சியுள்ளவராயிருந்தார். அவர் பதிலை உடையவராயிருந்தார். அவருடைய வழியில் எதுவுமே தடையாக இருக்கப்போவதில்லை. அவருடைய மேலங்கியினூடாக மூன்று அல்லது நான்கு பஸ்கெட்...பெரிய துப்பாக்கி குண்டுகள் அவரது கோட்டைத் துளைத்த போதிலும், அது அவருக்கு ஒருபோதும் காயமேற்படுத்தவில்லை. அவர் முயன்று...அவர் ஏதோ ஒரு காரியத்தைச் சாதிக்க வேண்டுமென்று விரும்பினார், அவர் அதன் பேரில் ஜெபித்தார், அவர் விடாமுயற்சியுள்ளவராயிருந்தார். ஒன்றுமே அவருடைய வழியில் நிற்கவில்லை.

46 நோவாவின் நாட்களில் நோவா எவ்வளவு விடாமுயற்சியுள்ளவனாயிருந்தான் என்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? இப்பொழுது, அவன் ஒரு விவசாயியாக இருந்தான்.

47 ஒருவேளை, இன்றைய காலகட்டத்தை விட அறிவியல் ஆராய்ச்சி செழித்திருந்த ஒரு காலத்தில் அவர்கள் வாழ்ந்தார்கள், ஏனென்றால் அக்காலத்தில் அவர்கள் கூர்நுனி கோபுரங்களைக் கட்டினார்கள். உங்களில் எவரேனும் அந்தப் பெரிய எகிப்திய கூர் நுனி கோபுரத்தை அணுகும் சிலாக்கியத்தைப் பெற்றிருந்தால், ஸ்பிங்க்ஸ் சிலை போன்றவற்றைக் காணும்போது, ஏன், பார்ப்பதற்கே ஆச்சரியமாக இருக்கிறது. எப்படியாய் அவர்கள் அந்தக் கற்பாறைகளை ஆகாயத்தில் கொண்டு வந்தார்கள், ஏறக்குறைய ஒரு நகரத் தொகுதி உயரத்திற்கு, அவைகளின் எடை ஆயிரக்கணக்கான டன்கள்! இன்றைக்கு நம்மால் அதை மீண்டும் செய்ய முடியவில்லை. நாம் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் ஏதோ ஒன்றை உடையவர்களாயிருந்தனர்.

48 அவர்கள் ஒரு சாயத்தை உடையவர்களாயிருந்தனர். அவர்கள் ஒரு சரீரத்தை தைலமிடக்கூடிய ஏதோ ஒன்றை வைத்திருந்தனர், அது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இயற்கையாகவே காட்சியளிக்கும். அவர்கள் கொண்டிருந்த கலைகள், வண்ணங்கள் போன்றவற்றை நாம் பெற்றிருக்கவில்லை; ஒரு பெரிய விஞ்ஞான காலம்.

49 ஆனால் ஒரு நாள், நோவா வயலில்—ஒருகால் அவனுடைய பயிரைச் பராமரித்துக் கொண்டிருந்தபோது, தேவன் அவனுக்குத் தோன்றி, அவனிடம், "உன் வீட்டாரின் இரட்சிப்பிற்காக ஆயத்தமாகி, ஒரு பேழையைக் கட்டு. மழை பெய்யப்போகிறது" என்றார்.

50 இப்பொழுது, ஜலப்பிரளயத்திற்கு முந்தின காலத்தில் மழை பெய்யவில்லை என்பதை நாம் யாவரும் அறிவோம். இப்பொழுது, அது அந்த நாளிலிருந்த விஞ்ஞான சிந்தனையாளர்களோடு ஒத்துப் போகவில்லை. அவருடைய செய்தி முரண்பாடாயிருந்தது.

சந்தேகமின்றி, அறிவார்ந்த விஞ்ஞானிகள் அவனிடம் வந்து, “இதோ பாருங்கள், திரு. நோவா” என்று சொல்லியிருக்க முடியும். இப்போது நம்மிடம் நிலவை நோக்கிப் பயணிக்கக்கூடிய கருவிகளும், இது போன்ற அனைத்து அறிவியல் ஆராய்ச்சிகளையும் செய்யக்கூடிய கருவிகளும் உள்ளன. அங்கே மேலே தண்ணீர் இல்லை. கீழே இறங்கி வருவதற்கு தண்ணீர் இல்லாதிருக்கும்போது, அங்கிருந்து எப்படி தண்ணீர் வரப்போகிறது? நீ முட்டாள். நீ ஒன்றுமே செய்ய முடியாத ஏதோ ஒரு காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறாய். அங்கே மேலே தண்ணீர் இல்லை” என்றனர்.

51 ஆனால் நோவாவால், “மழை பெய்யும் என்று தேவன் கூறினார், அதுவே அதற்குத் தீர்வாகிறது. தேவன் அவ்வண்ணமாய்க் கூறினார்” என்று சொல்ல முடிந்தது. நூற்று இருபது ஆண்டுகளாக, தன் காலத்து அறிவியல் உலகத்தை எதிர்த்து, தனது செய்தி தேவனிடமிருந்து வந்ததால், அது சரியானது என்று அவன் விடாமுயற்சியுடன் தொடர்ந்து வலியுறுத்தி வந்தான். அவன் ஒரு இலக்கை அடைய வேண்டியிருந்தது. அவர் கவனித்துக்கொள்ள வேண்டிய ஒரு செய்தியை உடையவனாயிருந்தான். அவன் அவ்வாறு செய்வதில் விடாமுயற்சியுடன் இருந்தான். மற்ற உலகத்தார் என்ன கூறினபோதிலும் கவலைப்பட வேண்டியதில்லை, நோவா தேவனிடத்திலிருந்து கேட்டான். அதுதான் அவனுக்கு முக்கியமானதாயிருந்தது. அவன் அந்தச் சத்தத்தைக் கேட்டிருந்தான். அது தேவன் என்று அவன் நிச்சயமுடையவனாயிருந்தான், மேலும் அவன் உலகத்திற்கு மிகவும் முட்டாள்தனமாகத் தென்பட்ட ஏதோ ஒரு காரியத்தை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தான். ஆனால், அதே சமயத்தில், தேவன் தம்முடைய வார்த்தையைக் காத்துக் கொள்வார் என்பதை நோவா அறிந்திருந்தான்.

52 இன்றைய இந்தத் தருணத்தில், அது நமக்கு ஒரு பாடமாக அமைய வேண்டாமா? இயேசு, “நோவாவின் நாட்களில் நடந்தது போல மனுஷகுமாரன் வரும் நாட்களிலும் நடக்கும்” என்று கூறினார். உலகத்திற்கு முட்டாள்தனமான ஒரு செய்தி, அவர்கள் அதைப் புரிந்து கொள்ளவில்லை, ஆனால் அதே சமயத்தில் பரிசுத்த ஆவியுடன் தொடர்புக் கொண்டவர்கள், அவர் மீண்டும் வருவார் என்பதை அறிந்துள்ளனர்.

53 பாவம் வயோதிக நோவா, அவன் எவ்வளவு மகிழ்ச்சியான தருணங்களையும், உலகத்தையும், அதில் நடக்கும் விஷயங்களையும் இழந்து கொண்டிருக்கிறான், என்று ஜனங்கள் அவன்மீது பரிதாபப்பட்டதை என்னால் பார்க்க முடிந்தது. ஆனால் நோவாவோ, தன் விடாமுயற்சியை இழக்காமல், விடாப்பிடியாக இருந்தான்.

54 ஒரு நாள் தேவன் நோவாவிடம், “சரி, நீ உன்னுடைய பங்கை இப்பொழுது செய்துவிட்டாய். இப்பொழுது நீயும் உன் வீட்டாரும் பேழைக்குள்ளாக வாருங்கள்” என்றார். மேலும்...பறவைகள் உள்ளே

பறக்கத் தொடங்கியதையும், விலங்குகளும் இரண்டிரண்டாக உள்ளே செல்லத் தொடங்கியதையும் கவனித்தார்கள். நோவாவும் அவருடைய குடும்பத்தினரும் உள்ளே சென்றார்கள்.

55 எல்லைக்கோடு விசுவாசிகள் எப்பொழுதுமே இருக்கிறார்கள்; நான் அவர்களை அழைக்கிறேன், சபைக்கு வரும் ஜனங்கள், அவர்கள் ஒருக்கால் பாடற் குழுவினரிடத்திலிருந்து வரும் ஒரு செய்தியை அல்லது பாடகர்களிடத்திலிருந்து வரும் ஒரு செய்தியை அல்லது ஒரு சாட்சியை ஊழியக்காரரிடமிருந்து கேட்டு மகிழ்வார்கள். அவர்கள் அதை அனுபவிப்பார்கள், ஆனால், உள்ளே வந்து அதன் பாகமாயிருக்க, அவர்கள் அதைச் செய்யமாட்டார்கள். அவர்கள் செவிகொடுக்க விரும்புகிறார்கள், ஆனால் அவர்கள் அதன் பாகமாக இருக்கமாட்டார்கள். அவர்கள் அவர்களோடு அடையாளங்கண்டு கொள்ளப்பட விரும்புவதில்லை. அவர்கள் ஒரு பக்கமாக விலகியிருக்க விரும்புகிறார்கள். அது எப்பொழுதும் அவ்வாறே இருந்து வருகிறது, அந்த நாளிலும் அது இருந்தது என்பதில் சந்தேகமேயில்லை.

56 அப்பொழுது பேழையின் கதவு மூடப்பட்டபோது, அந்த ஜனங்களில் அநேகர், “சரி, நாம் எழுந்து போய்ச் சுற்றி நிற்போம், இப்பொழுது அது சம்பவித்தால், உதாரணமாக, அந்த வயோதிகர் கூறியது சரிதான். அந்த வயதானவர் கொஞ்சம் மனநிலை சரியில்லாதவர் என்று நாம் எல்லாரும் ஒருவிதமாக நினைத்தோம், ஆனால் நான்—நான்—நான் வாசலில் நின்றுகொண்டு அவர் பிரசங்கிப்பதைக் கேட்டு மகிழ்ந்தேன். இப்பொழுது அந்தக் கதவை ஏதோ ஒன்று மூடினது என்பதை நாம் அறிவோம். இப்பொழுது, அவர் ஒரு நல்ல வயோதிக மனிதர். அங்கே கொஞ்சம் தண்ணீர் வர நேர்ந்தால், ஏன், ஏன், அவர் நம்மை உள்ளே கொண்டு செல்வார்” என்றனர். நீங்கள் பாருங்கள், நீங்கள் நம்ப விரும்புகிறதில்லை...

57 நீங்கள் தேவனுடைய நன்மையைச் சோதிக்க விரும்பாதீர்கள். நீங்கள் நிச்சயமுடையவர்களாய் இருக்க வேண்டும், நீங்கள் உள்ளே வருவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும்போதே நீங்கள் உள்ளே வர வேண்டும்.

58 அதன்பின்னர், முதலாவது காரியம் உங்களுக்குத் தெரியுமா, முதலாம் நாளில், சில சமயங்களில் தேவன் தம்முடைய ஜனங்கள்மீது எவ்வளவு பாரத்தை ஏற்படுத்துகிறார் என்று பாருங்கள், முதலாம் நாளிலே நோவா தன்னுடைய குடும்பத்தாரிடம், “சரி, இப்பொழுது நாம் மாடிக்கு ஏறுவோம். இப்பொழுது, காலையில் வானம் இருண்டு போகப் போகிறது. அதற்கு முன்பு ஒருபோதும் இருளாய் இருந்ததேயில்லை. நாம் அதை ஒருபோதும் கண்டதேயில்லை. மழை பெய்யப்போகிறது. மின்னல்கள் ஆகாயமெங்கும் வீசும்” என்றான். அடுத்த நாள் காலையில் சூரியன் உதயமாகிறது. எந்த அடையாளமும் இல்லை. நோவாவும் அவனுடைய குடும்பத்தினரும் நாள்

முழுவதும் பார்த்துக்கொண்டிருந்தனர். பாருங்கள், விஷயங்கள் நடந்தபடியேதான் நடந்தன.

59 எல்லைக்கோடு விசுவாசிகள், "ஆ, அந்த வயோதிக நபர் தவறாயிருந்தார்" என்று கூறினர், என்று நான் யூகிக்கிறேன். அவர்கள் புசித்துக் கொண்டும், குடித்துக்கொண்டும், களிகூர்ந்து கொண்டும் நகரத்திற்குச் திரும்பிச் சென்றனர்.

60 அவனுடைய குடும்பம், அந்த மனிதனின் மேல் என்ன ஒரு நெருக்கடி இருந்திருக்கும் என்று நான் யூகிக்கிறேன். ஆனால் அவன் மனம் தளர்ந்து, கதவைத் தட்டி, "மக்களே, கதவைத் திறந்து விடுங்கள், நான் செய்தது தவறு" என்று சொல்லத் தொடங்கவில்லை. ஏன்? உண்மை தன்னிடம்தான் இருக்கிறது என்று அவனுக்குத் தெரிந்திருந்தது, அதனால் அவன் அதைப் பற்றிக்கொண்டான்.

61 "இன்று மழை பெய்யவில்லையென்றால், நாளைப் பெய்யும்." அதுதான். சரி.

62 அதன்பின்னர் இரண்டாம் நாள் வந்தது, சூரியன் உதயமானது என்பதை நாம் கவனிக்கிறோம். அது ஒவ்வொரு நாளும் செய்தது போலவே கடந்து சென்றது. மழைக்கான அறிகுறியே இல்லை. அப்பொழுதும் அவன் விடாப்பிடியாக இருந்தான். ஏழு நாட்களைக் குறித்து, நோவா அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தான், "இன்று மழை பெய்யவில்லையென்றால், நாளைப் பெய்யும்" என்றான். பாருங்கள், அவன் நங்கூரமிடப்பட்டிருந்தான். அவன் விடாமுயற்சியுள்ளவனாய், விடாமுயற்சியுள்ளவனாயிருந்தான், ஏனென்றால் தேவன் அவ்வண்ணமாய் கூறினார் என்பதை அவன் அறிந்திருந்தான், அது அந்தவிதமாக இருக்க வேண்டியதாயிருந்தது.

63 இப்பொழுது, முடிவிலே, ஏழாம் நாளிலே, அவன் ஜன்னலின் வழியாக நோக்கிப் பார்த்தபோது, வானம் இருண்டு கொண்டிருந்தது. காற்று மலைகளைக் கடந்து வீசிக் கொண்டிருந்தது. மரங்கள் வளைந்து கொண்டிருந்தன. ஜனங்கள் என்ன செய்வதென்று அறியாமல் அலறிக்கொண்டிருந்தனர். கொஞ்சங் கழித்து, மகத்தான பெரிய மழைத்துளிகள் முதன் முறையாக வீதிகளில் விழத் தொடங்கின. சாக்கடை கால்வாய்கள் நிரம்பின. எல்லா ஊற்றுகளும் உடைந்து போயின. தண்ணீர் பெருகத் துவங்கினது. ஜனங்கள் தங்களுடைய படகுகளில் ஏறினர், அவர்கள் மூழ்கினர். காற்று பலமாக வீசியது. அது இன்னும் ஆழமாகிக்கொண்டே சென்றது. சிறிது கழித்து, கப்பல் ஏறத் துவங்கியது. அவன் ஜன்னலின் வழியாக வெளியே கவனித்துப் பார்த்தான்.

64 முடிவாக, ஜனங்கள் கூக்குரலிட்டனர், அவன் அணுகி அவர்களைப் பிடிப்பதற்கு எந்த வழியும் இல்லை. அவன் மேல்தளத்தில் இருந்தான். அவர்கள் தங்களுடைய கிருபையின் நாளில் பாவம் செய்திருந்தனர். அவர்களுக்கு ஒன்றுமே விடப்பட்டிருக்கவில்லை. அப்பொழுது அது மிகவும்

தாமதமாகிவிட்டது. முடிவிலே, நோவாவிற்கு அது என்ன ஒரு உணர்வாய் இருந்திருக்க வேண்டும், அவன் வெளியே வீதியில் கவனித்துக் கொண்டிருந்தபோது, எல்லா சிறு படகுகளையும், அவைகள் தேவனால் கட்டப்பட்டதா அல்லது இல்லையா என்று கண்டான்.

65 நீங்கள் பாருங்கள், இன்றைக்கு ஜனங்கள் அதை நினைக்கிறார்கள். "அவர்கள் சொந்தமாகப் பேழையைக் கட்டலாம். அவர்கள் தங்களுடைய சொந்த இரட்சிப்பைப் ஏற்படுத்திக் கொள்ள முடியும்." உங்களால் அதைச் செய்ய முடியாது. தேவன் நமக்கான இரட்சிப்பை உண்டுபண்ணினார், நாம் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். வெறுமனே மனிதனால் கட்டப்பட்ட பேழை நிலைக்காது. மனிதன் சாதிக்கக்கூடிய எதுவும், அது தேவனுடைய சித்தத்திற்கும் வார்த்தைக்கும் முரணாக இருந்தால், அது நிலைக்காது.

66 ஆனால் திருமதி நோவா மற்றும் அவரது மருமகள்கள், மற்றும்—மற்றும் மகன்கள்—மகன்கள், மற்றும் அது போன்ற மற்றவர்களும் இருந்தபோது அது எப்படி இருந்திருக்கும், அப்பொழுது அவர்கள் பேழையின் மேல் தண்ணீர் வருவதைக் கண்டனர், இருப்பினும் பேழை தரையோடு ஒட்டியிருந்தது. ஆனால் சிறிது நேரத்திற்குப் பிறகு அது விடுபட்டதை அவர்கள் உணர்ந்தார்கள். அவள் மிதந்துகொண்டிருந்தாள். ஓ, நோவா தன்னுடைய எல்லா காரியங்களையும், அவன் என்ன சாதிக்க முயன்றான் என்பதையும், அவன் என்ன செய்திருந்தான் என்பதையும், அவனுடைய செய்தி அப்பொழுது பலனளித்துக் கொண்டிருந்ததையும் அறிந்திருந்தான். அது அவிழ்த்து விடப்பட்டிருந்தது. அவன் பூமியை விட்டுச் சென்றுகொண்டிருந்தான்.

67 ஒரு மனிதன் நின்றுகொண்டு, போதகருடன் கைகுலுக்கி, தன்னுடைய பெயரை ஒரு புத்தகத்தில் பதிவு செய்யாமல், ஆனால் அவனுக்குள் ஏதோ ஒன்று விடுவிக்கப்பட்டது உணரும் வரை அவன் அங்கேயே இருக்கும்போது, அவன் விசுவாசத்தினால் அப்பால் மிதக்கத் துவங்கி, தன்னுடைய பாவங்கள் கடந்துவிட்டன என்பதை அறிந்திருக்கிறான், அவன் தன்னுடைய ஆத்துமாவை கிறிஸ்துவுக்குள் நங்கூரமிட்டிருக்கிறான், ஏதோ ஒன்று அவனை மேன்மையடையச் செய்து கொண்டிருக்கிறது; விடாமுயற்சியுள்ள, விடாமுயற்சி.

68 மோசே, எகிப்துக்குச் சென்று ஒருவனை கொன்ற பிறகும், தனது கல்வி மற்றும் பயிற்சி அனைத்தையும் கொண்டிருந்தபோதிலும், மிகுந்த விடாமுயற்சியுடன் இருந்தான். ஆனாலும் அவன் அந்தக் காரியத்தில் தவறு செய்துவிட்டான், அவன் முயற்சிக்கிறான், ஏனென்றால் அவன் தன்னுடைய கல்வியினாலும், தன்னுடைய சொந்த...அவன் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தான். அவன் ஒரு இராணுவ வீரன் என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. அவன் என்ன செய்யப் பயிற்றுவிக்கப்பட்டிருந்தான், அது தவறிவிட்டது

என்பதை நாம் கண்டறிகிறோம். அது தவறினபோது, அவன் அதன் பேரில் விடாமுயற்சியுடன் இருக்கவில்லை, அவன் நாற்பது வருடங்களாக வனாந்திரத்திற்கு ஓடினான்.

69 ஆனால் ஒரு சமயம் அவன் எரிகிற புதரில் தேவனை சந்தித்து, பாதரட்சைகளை கழற்றிப் போட்டு, அவன் தேவனுடைய மகிமையைக் கண்டான். அவன் ஒரு காய்ந்த கோல் சர்ப்பமாக மாறி, மீண்டும் ஒரு கோலாய் திரும்புவதைக் கண்டான். ஒரு குஷ்டரோகி கரம் தேவனுடைய வல்லமையினால் குணமாக்கப்படுவதை அவன் கண்டான். அப்பொழுது தேவனுடைய சத்தம் அவனோடு பேசினதை அவன் கேட்டான். அப்பொழுது அவனை எதுவுமே தடுத்து நிறுத்தப் போவதில்லை.

70 நான் அவனை அடிக்கடி விவரித்திருக்கிறேன், அது ஒரு புனிதத்துவத்தை பாழாக்குகின்ற வகையில் அல்ல என்று நான் நம்புகிறேன், எண்பது வயது நிரம்பிய ஒரு வயோதிக மனிதன், தன்னுடைய மனைவி ஒரு கழுதையின் மேல் அமர்ந்து கொண்டிருக்க, அவளது இடுப்பில் ஒரு—ஒரு குழந்தை இருந்தது. அடுத்த நாள்...தாடி தொங்கிக் கொண்டிருக்க, அவனுடைய கையில் அந்தத் தடியோடு, செல்கையில், அவனது கண்கள் வானத்தை நோக்கியிருக்க, வெள்ளைத் தாடி பறந்துகொண்டிருந்தது.

யாரோ ஒருவர், "மோசே, நீ எங்கே போகிறாய்?" என்று கேட்டார்.

71 "நான் எகிப்தை கைப்பற்ற அங்குப் போகிறேன்." ஒரு மனிதனின் ஆக்கிரமிப்பு, அது ஒரு விதமாக முட்டாள்தனமாகத் தென்பட்டது. ஆனால் தேவனுடைய வழிகள், மாம்ச சிந்தைக்கு முட்டாள்தனமாக உள்ளது. ஆனால் அதில் நங்கூரமிடப்பட்டிருக்கிறவர்களுக்கு அது விலையேறப்பெற்றதாயுள்ளது. அவர்கள் எதைக் குறித்து பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் அறிவார்கள். அவர்கள் தொடர்ந்து முன்னேறிச் செல்கிறார்கள். ஓ, அது என்ன ஒரு காரியமாய் இருந்திருக்க வேண்டும்! நோவா அல்லது...

72 சரியாகக் கூறினால் மோசே எகிப்திற்குச் செல்லப் போகிறான், அது ஏறக்குறைய இன்றைய ருஷ்யாவைப் போன்றே உலகமே பயமுறுத்தியிருந்த ஒரு தேசமாக இருந்தது. எண்பது வயது நிரம்பிய ஒரு வயோதிக மனிதன் தன்னுடைய மனைவி கோவேறு கழுதையின் மேல் அமர்ந்து கொண்டு, ஒரு கோணலான தடியை தன் கையில் ஏந்திக் கொண்டு, கைப்பற்றப் போகிறான். உலகத்திற்கு அதைக் குறித்த விநோதமான காரியம், அவன் அதைச் செய்தான். அவன் கைப்பற்றினான்.

73 தேவன் ஒரே ஒரு மனிதனை, ஒரு நபரை, எங்காவது வைத்திருந்தால் போதும், அது அவரோடு பிணைக்கப்பட்டுள்ளது, அவர்கள் எங்கே நிற்கிறார்கள் என்பதை அறிந்திருக்கிற ஒருவன் விடாமுயற்சியுள்ளவன். அப்பொழுது துன்புறுத்தல்கள்,

வித்தியாசம், அவர்களைத் தொல்லைப்படுத்துவதேயில்லை. கைப்பற்றப் போய், அவன் அதைக் கைப்பற்றினான்.

74 அங்கு ஒரு மனிதன் பதினான்கு அடி உயரத்திற்கு அல்லது அதற்கு மேலே வந்தபோது அது மிகவும் முட்டாள்தனமாகக் காணப்பட்டது. அவனுடைய விரல்கள் பதினான்கு அங்குல நீளமுள்ளதாக இருந்தது நான் நினைக்கிறேன்; ஒரு நெசவாளருடைய ஊசியைப் போன்ற ஒரு ஈட்டியைத் தன் கையில் ஏந்திக் கொண்டு, அநேகமாக இங்கிருந்து அங்கே வாசல் வரை பாதியளவு இருக்கும்; நின்று கொண்டு, இஸ்ரவேலருக்குச் சவால் விடுகிறான். அங்கே மறுபக்கத்தில் சவுல் இருந்தான், அவன் தன் படையில் இருந்த அனைவரையும்விட தலைக்கும் தோள்களுக்கும் மேலாக உயரமாக இருந்தான், ஒரு பயிற்றுவிக்கப்பட்ட மனிதன், அவர்கள் எல்லோருமே நன்கு பயிற்றுவிக்கப்பட்டு, ஏமாற்றப்பட்டவர்கள். அது உண்மை.

75 பிசாசும் அவர்களோடு கருத்து கேட்க விரும்பினான். அந்தவிதமாகவே பிசாசு தனக்கு மிகச் சிறந்த பக்கம் இருப்பதாக நினைக்கும்போது, அவன் அதைச் செய்கிறான். "அங்கே வாருங்கள். நாம் இரத்தம் சிந்தாமல் இருப்போமாக. நாங்கள் இருவர் மாத்திரமே. நான் உங்கள் மனிதனை சண்டையிட்டு வென்றால், அப்பொழுது நாங்கள்...நீங்கள் எங்களுக்குப் பணிவிடை செய்வீர்கள். அவன் என்னைக் கொன்று விட்டால், அப்பொழுது எங்களுடைய சேனைகளுக்குப் பதிலாக எங்களில் ஒருவன் மாத்திரமே மரிப்பான்" என்றான். அவனால் என்ன ஒரு கருத்தை முன்வைக்க முடியும்! எல்லோரும் மரண பயத்தில் இருந்தனர்.

76 கூன் விழுந்த தோள்களைக் கொண்ட ஒரு சிறுவன், தன் மீது ஒரு சிறிய ஆட்டுத்தோலைச் சுற்றிக்கொண்டு, இடுப்பில் ஒரு கவணைக் கட்டியபடி, கையில் சில உலர் திராட்சை அடைகளுடன் தன் சகோதரர்களைப் பார்க்க வந்ததைப் பார்ப்பதற்கு பொருத்தமற்றதாக இருந்தது. ஒருமுறை, அந்தப் பிசாசு தேவனுடைய மனிதர் ஒருவருக்கு முன்பாகத் தற்பெருமை பேசியபோது, அவர் அதைக் கண்டித்தார். ஏன்? தேவன் யாராயிருந்தார் என்பதை அவன் அறிந்திருந்தான். அவன், "நான்...அப்படியென்றால், விருத்தசேதனம் செய்யப்படாத அந்தப் பெலிஸ்தியன் ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை அவமதிப்பதை, ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளே அனுமதிக்கலாம் என்று நீங்கள் எனக்குப் பொருட்படுத்தி கூறுகிறீர்களா? நான் போய் அவனுடன் போரிடுவேன்," என்றான். ஓ, என்னே! ஏன்? அவன் விடாப்பிடியாயிருந்தான்.

77 அவனுடைய சகோதரர்கள், "ஓ, நீ குறும்புக்காரன் என்பதை நாங்கள் அறிவோம். உன்னுடைய தகப்பன் உன்னிடத்தில் கவனிக்கும்படி கூறின ஆடுகளோடு வீடு திரும்பு. நீ யுத்தத்தைக் காணவே இங்கு வந்திருக்கிறாய்" என்றனர். தேவனுடைய

மனிதனுக்கு ஏதோ காரியம் சம்பவித்திருக்கும்போது, நீங்கள் அவனிடம் பேசி வெல்ல முடியாது.

78 எனவே அவன் சவுலிடம் செல்கிறான். சவுல் தன்னுடைய தலையைச் சொரிந்து கொண்டு, கீழ் நோக்கிப் பார்த்தான் என்று நான் யூகிக்கிறேன். அவன், "மகனே, உன்னுடைய தைரியத்தை நான் பாராட்டுகிறேன், ஆனால் அந்த மனிதன் ஒரு போர்வீரன். அந்த மனிதன் தன்னுடைய வாலிபப் பருவம் முதற்கொண்டே ஒரு போர்வீரன். நீ ஒரு வாலிபனைத் தவிர வேறொன்றுமில்லை, ஒரு கவணைக் குறித்தும், ஒரு ஈட்டியைக் குறித்தும், எப்படி சண்டையிடுவது என்பதைக் குறித்து ஒன்றுமே அறியாதிருக்கிறாய்" என்றான்.

79 ஓ, ஆனால் அவன் ஏதோ ஒன்றை அறிமுகப்படுத்துவதைக் கவனியுங்கள். "உம்முடைய ஊழியக்காரன் தன் தகப்பனுக்காக ஆடுகளை மேய்த்து வந்தான்." மேலும் அவன், "ஒரு நாள் ஒரு கரடி உள்ளே வந்து, அது என்னுடைய தகப்பனாருடைய ஆட்டுக்குட்டிகளில் ஒன்றைக் கொண்டு சென்றது, நான் அதைப் பின் தொடர்ந்து சென்று, நான் அதைக் கொன்றேன். அப்பொழுது ஒரு சிங்கம் உள்ளே வந்து, ஒன்றைப் பிடித்துக் கொண்டு, அதை வெளியே கொண்டு சென்றது, நான் அதைப் பின்தொடர்ந்து சென்று, நான் அதைக் கொன்றேன். இப்பொழுது," அவன், "கரடியின் மேலும் சிங்கத்தின் மேலும் வெற்றியை எனக்கு அளித்த தேவன், ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை எதிர்த்து நிற்கிற அந்த விருத்தசேதனமில்லாத பெலிஸ்தியனின் மேல் அவர் எவ்வளவு அதிகமாக எனக்கு வெற்றியைத் தருவார்!" என்றான்.

80 சவுல், "ஆனால் நீ ஒரு சிறுவன்" என்றான். அவன், "ஒரு சின்ன ஆட்டுத் தோலைத் தவிர, நீ ஒன்றும் அணிந்திருக்கவில்லை, என்றான். பொறு, நான்—நான் என்னுடைய ஆயுதங்களை உன்மேல் அணிவிப்பேன்" என்றான்.

81 எனவே அவன் அவனைக் கொண்டுபோய், அவனுடைய ஆயுதங்களை அவனுக்கு அணிவித்தான். உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? அவன் "சிவந்த நிறமுள்ளவன்" என்று வேதம் கூறியுள்ளது, அவன் ஒரு சிறு உருவம் கொண்டவன், ஒரு வேளை நூற்றுப்பத்து பவுண்டு எடையுள்ள மனிதனாய் இருந்திருக்கலாம், ஆனால் ஒரு பெரிய கவசத்தை அணிந்தால் சுமார் இருநூற்றைம்பது பவுண்டு எடையும், ஏழடிக்கும் சற்று அதிகமான உயரம் இருக்கும். அவன் முழுவதுமாக நொறுக்கப்பட்டிருந்தான். உங்களால் அதைக் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா?

82 தாவீது சுற்றும் முற்றும் பார்த்தான். தோள்பட்டைகள் கிட்டத்தட்ட அந்த அளவுக்கு வெளியே உள்ளன. அவனுடைய மார்பகக்கவசம் அந்தவிதமாகத் தொங்கிக் கொண்டிருக்க, அவனுக்கு ஒரு பாவாடை போன்று காணப்பட்டது. ஒரு தேவனுடைய மனிதனுக்கு

மதசம்பந்தமான அங்கி பொருந்தவில்லை என்பதை அவன் கண்டறிந்தான். ஹூ-ஹூ. "இந்தக் காரியத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப் போடுங்கள். எனக்கு அதைக் குறித்து ஒன்றுமே தெரியாது. ஆனால் எது சரியென்று எனக்குத் தெரிந்ததோ, அதனோடு நான் செல்லட்டும்" என்றான். அங்குதான் காரியம். அவன் ஆவியின் வல்லமையில் சென்றான்.

83 ஹட்ஸன் டெய்லர் ஒருமுறை ஒரு சீன மிஷனரியிடம் கூறினார் என்று நான் நினைக்கிறேன். இந்தச் சீனப் பையன், "திரு. டெய்லர், என்னுடைய அழைப்பை நான் கிறிஸ்துவுக்குள் உணர்ந்திருக்கிறேன்" என்று கூறினான். அவர், "நான் இப்போது சென்று எனது இளங்கலைப் பட்டத்தையும், பின்னர் எனது முனைவர் பட்டத்தையும், அதோடு எனக்குத் தேவையான வேத பாண்டித்துவ பட்டத்தையும் படித்துப் பெறட்டுமா?" என்று கேட்டான்.

84 திரு. டெய்லர், "மகனே, இப்பொழுதே போ. இப்பொழுதே செல். அந்த நேரம் வரும் வரைக்கும் காத்திருக்க வேண்டாம். நீ உன்னுடைய ஜீவியத்தின் பெரும்பகுதியை வீணடித்துவிடுவாய்" என்றார்.

85 அது சரி என்றே நான் நினைக்கிறேன். நான் திரு. டெய்லருடன் உடன்படுகிறேன். இப்பொழுதே செல்லுங்கள். நமக்குக் கல்வி தேவையில்லை என்று கூறுவதன் மூலம் நான் இப்பொழுது என்னுடைய அறியாமையை ஆதரிக்க முயற்சித்துக் கொண்டிருக்கவில்லை. அதற்கும் அதற்குரிய இடம் இருக்கலாம். ஆனால் இரட்சிப்பில்லாத கல்விக்கு நங்கூரமே கிடையாது. அவை யாவுமே பாய்மரங்கள், நங்கூரமே இல்லை. மெழுகுவர்த்தி எரியும்போதே செல். அது பாதி எரிந்து போகும் வரை காத்திருக்க வேண்டாம். நீங்கள் அதைக் கொளுத்தும்போதே செல்லுங்கள். அது எப்படிப் பற்றிக்கொண்டது என்பதைத் தவிர உங்களுக்கு வேறு எதுவும் தெரியாவிட்டாலும், அது எப்படிப் பற்றிக்கொண்டது என்று மற்றவர்களிடம் சொல்லுங்கள், ஒருவேளை அவர்களும் கூடப் பற்றிக்கொள்ளலாம். புரிகிறதா? [ஒலிநாடாவில் காலியிடம்—ஆசி.] ஆகவே, மெழுகுவர்த்தியை ஏற்றிய உடனேயே, அதை எப்படி ஏற்றினீர்கள் என்று எல்லோரிடமும் சென்று சொல்லுங்கள், ஒருவேளை அவர்கள் உங்களால் பற்றிக்கொள்ளலாம். பார்த்தீர்களா? கவனியுங்கள்.

நிச்சயமாகவே, தாவீது விடாமுயற்சியுள்ளவனாயிருந்தான், ஏனென்றால் அவன் அறிந்திருந்தான்.

86 சிம்சோன் ஆயிரம் பெலிஸ்தியர்களோடு அவனைச் சுற்றிலும் ஒருநாள் களத்தில் சந்தித்தான். சுற்றும் முற்றும் பார்த்தான்...அவன் சண்டையிடத் தெரிந்த ஒரு பயிற்சி பெற்ற மனிதனாயிருக்கவில்லை. ஆனால் அவன் தன்னுடைய தலையைத் திருப்பியபோது, அந்த உடன்படிக்கையை அவன் உணர்ந்தான், அந்த ஜடைகள்

அவனுடைய தோள்களில் மோதினது. அதைத்தான் அவன் உணர வேண்டியதாயிருந்தது. அவன் தன்னுடைய கையில் முதலாவது ஒரு கோவேறு கழுதையின் தாடை எலும்பைப் பெற்றிருந்தான். அவன் ஆயிரம் பெலிஸ்தியர்களை வீழ்த்தினான். ஏன்? அவன் விடாமுயற்சியுள்ளவனாயிருந்தான், ஏனென்றால் தேவன் அவனோடு, அந்த ஏழு ஜடைகளைக் குறித்தும் ஒரு உடன்படிக்கை செய்திருந்தார் என்பதை அவன் அறிந்திருந்தான். அவை தங்கள் இடத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் வரை, ஒன்றுமே அவனைத் தொல்லைப்படுத்தப் போவதில்லை.

87 ஓ, சகோதரனே, சகோதரியே, ஜீவனுள்ள தேவனுடைய சபையானது இன்றிரவு விடாமுயற்சியோடு நிற்க வேண்டும். பரிசுத்த ஆவியின் உடன்படிக்கையை, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் எல்லா பாவங்களிலிருந்தும் நம்மைச் சுத்திகரிப்பதை நம்மால் உணர முடிந்த வரையில், நாம் ஒன்றுமே நம்முடைய வழியில் நிற்க அனுமதிக்கக் கூடாது. விடாமுயற்சி, நிச்சயமாக.

88 யோவான், உரைக்கப்பட்டிருந்த அந்த மகத்தான தீர்க்கதரிசி எழும்ப; அவன் வனாந்திரத்தில் இருந்தபோது, அவன் தேவனால் கூறப்பட்டான். உண்மையாகவே அவர்கள் ஒரு மேசியாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்; நானூறு ஆண்டுகளுக்கு முன்னமே அவர்கள் ஒரு தீர்க்கதரிசியை உடையவர்களாயிருந்தனர். ஆனால், வனாந்தரத்தில் தேவன் அவனிடம் சொன்னார், அவர், "இப்பொழுது, அவர்கள் உங்களுக்கு, 'வேத பண்டிதர், நீங்கள் மேசியாவை அறிவிக்க வேண்டுமானால், *இன்ன-இன்ன* அந்த நபர் தான் மேசியாவாக இருக்க வேண்டும். ஏன், அவர் எங்களுடைய சபையில் மிகச் சிறந்த நபராய் இருக்கிறார்.' மேலும் அவர்கள், 'சரி, இங்கே இருக்கும் பிரதான ஆசாரியனின் பேரன்தான், அவன்—அவன் தான் அதைப் பெற்றுக்கொள்ள வேண்டியவன்,' என்றெல்லாம் சொல்லப் போகிறார்கள். ஆனால், பாருங்கள், யோவான், இது ஒரு உண்மையான வேலை. நீங்கள் நிச்சயமுடையவர்களாயிருக்க வேண்டும், எனவே நான் உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுக்கப் போகிறேன். அவர்மேல் ஆவியானவர் இறங்கி வந்து தங்கியிருப்பதை நீ காண்பாய், அந்த ஒருவரே பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார்" என்று கூறினார்.

89 யோவான் அங்கே நின்று கொண்டு, சபையோர் வருவதைக் கவனித்துக் கொண்டிருந்தான். அவன்...*இது, அது* மற்றும் *மற்றொன்று* என்று ஒவ்வொருவரும் வருகிறார்கள். ஆனால் அவனால் அவரைக் காண முடியவில்லை. ஒரு நாள், நின்று குருவானவரோடு விவாதித்துக் கொண்டிருக்கையில், "அன்றாட பலி எடுக்கப்படும் நேரம் வரும் என்று நீர் எனக்குக் கூறுகிறீரா?" என்று கேட்டார்.

அவன், "ஒரு மனிதன் வருவார்" என்றான்.

90 அவன் நோக்கிப் பார்த்தான். அங்குதான் அது இருந்தது. “இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி” என்றான்.

91 அவன் அதை அறிந்திருந்தான், ஏனென்றால் தேவன் அவனிடம், “ஆவியானவர் யார்மேல் இறங்குகிறதை நீ காண்பாயோ” என்று கூறியிருந்தார். அவன் அதை அறிந்திருந்தான். அவன் விடாப்பிடியாயிருந்தான்.

92 இந்தச் சிறிய பெண்மணிக்குத் திரும்புவோம். விடாமுயற்சியுள்ள, விடாப்பிடியுள்ள, நிலைநிறுத்திக் கொண்டிருந்த பல்வேறுபட்டவர்களைக் குறித்து நாம் கூறக்கூடிய அநேக காரியங்களை நாம் வைத்துள்ளோம்.

93 என்னிடம் ஒரு சிறிய வாசகம் உள்ளது, அதை நான் அடிக்கடி சொல்கிறேன். அதை ஏற்றுக்கொள்வது உங்களுக்கு நன்மையாக இருக்கலாம். “வெற்றியாளர் ஒருபோதும் முயற்சியைக் கைவிடுவதில்லை, முயற்சியைக் கைவிடும் ஒருவரால் வெற்றி பெற முடியாது.” அதைக் குறித்து சற்று சிந்தித்துப் பாருங்கள். “வெற்றியாளர் ஒருபோதும் முயற்சியைக் கைவிடுவதில்லை, முயற்சியைக் கைவிடும் ஒருவரால் வெற்றி பெற முடியாது.” நீங்கள் நிலைத்திருக்க வேண்டும். நீங்கள் துவங்குவதற்கு முன்பே, நீங்கள் கூறுவது சரியென்று நிச்சயமுடையவர்களாயிருங்கள். அப்பொழுது விடாமுயற்சியுள்ளவர்களாயிருங்கள், ஒன்றுமே உங்களை அசைக்காதிருக்கட்டும். தொடர்ந்து செல்லுங்கள். நான் அதைக் குறித்த ஒரு சிறு அனுபவத்தை உடையவனாயிருந்தேன், நீங்களும் அதை அறிவீர்கள். இந்த ஒரு காரியத்தை நான் அறிவேன், நீங்கள் தேவனுடைய சித்தத்தில் இருக்கிறீர்கள் என்று நீங்கள் நிச்சயமுடையவர்களாயிருக்கும்போது, நீங்கள் கல்வாரியில் மையம் கொண்டிருக்கிறீர்கள் என்று நீங்கள் நிச்சயமுடையவர்களாயிருக்கும்போது, எதுவுமே உங்களை அசைக்கப் போவதில்லை. நீங்கள் அங்கே இருக்கிறீர்கள்.

94 இந்தச் சிறிய ஸ்திரீ, அவள் ஒரு கிரேக்க, ஒரு சீரோபேனிக்கியா, அவள் இயேசுவின் கீர்த்தியைக் குறித்து கேள்விப்பட்டிருந்தாள். இப்பொழுது, விசுவாசம் எப்படி உண்டாகிறது? வார்த்தையைக் கேட்பதினாலே. அவள் அவரைக் குறித்து கேள்விப்பட்டிருந்தாள். அவள் ஒரு கிரேக்க தேசத்திலிருந்தபடியால், அவளுக்கு அநேக காரியங்கள் தடையாக இருந்திருக்கலாம் என்பதை நீங்கள் அறிவீர்கள். “விசுவாசம் கேள்வியினாலே வரும்.” நாம் அதை அறிவோம். அவளுக்கு இடையூறாக ஏராளமான காரியங்கள் இருந்தன, ஆனால் விசுவாசமோ வேறு யாரும் அறிந்திராத ஒரு ஆதாரத்தைக் கண்டடைகிறது.

95 எவருமே அதை விளக்கிக் கூற முடியாத இந்த மூல ஆதாரத்தை விசுவாசம் கண்டறிகிறது. அது நீங்கள் அறிந்த ஒரு காரியம்.

மற்றவர்களால் அதைக் காண முடியாது, ஆனால் விசுவாசம் அதைக் காண்கிறது. விசுவாசம் அதைக் காண்கிறது, இயற்கையான கண் அதைக் காணவில்லை. ஆனால் உட்புறக் கண் அதைக் காண்கிறது.

இப்பொழுது, அவளுக்கு இயேசுவின் தேவை இருந்தது. அவள் உடை-...

96 நீங்கள் கிறிஸ்துவைக் கண்டறிய வேண்டுமானால், நீங்கள் செய்ய வேண்டிய முதல் காரியம், நீங்கள் அவரைப் பற்றிய ஒரு தேவையைப் பெற்றுள்ளீர்கள் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். உங்களுக்கு அவர் தேவையில்லை என்று நீங்கள் நினைக்கும்போது, அவரை நீங்கள் ஒருபோதும் கண்டடையமாட்டீர்கள், ஏனென்றால், நீங்கள் அவரை விடாமுயற்சியுடன் தேடமாட்டீர்கள்.

97 "தேடுங்கள், அப்பொழுது நீங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள், திறக்கப்படும்" என்று கூறப்பட்டுள்ள அந்த வேதவாக்கியத்தை நீங்கள் கவனித்தீர்களா? உண்மையாகவே, [சகோதரன் பிரான்ஹாம் பிரசங்க பீடத்தின் மேல் ஒருமுறை தட்டுகிறார்—ஆசி.], அது திறக்கப்படும், தட்டுவது போன்றதல்ல. அவன் வெறுமனே சொல்லவில்லை "கர்த்தாவே, நான் வெளியே சென்றேன். இதோ நான் இருக்கிறேன். உனக்கு நான் வேண்டுமா?" என்று சொல்லவில்லை. இல்லை, அதுவல்ல அது. "தேடுகிறவன், தட்டுகிறவன்," தொடர்ச்சி. [சகோதரன் பிரான்ஹாம் பிரசங்க பீடத்தின் மேல் பலமுறை தட்டுகிறார்.] அது மற்ற வேதவாக்கியங்களோடு ஒப்பிடப்பட வேண்டும்.

98 அநீதியுள்ள நியாயாதிபதியையும் விதவையையும் போல. அவள் தொடர்ந்து அவனுடைய கதவைத் தட்டினாள். அவள் விடாப்பிடியாக இருந்தாள். இன்றைக்கு அவன் அவளைப் புறக்கணித்தால், நாளை அவள் மீண்டும் அவனுடைய கரங்களில் இருப்பாள்.

99 அந்தவிதமாகவே நீங்கள் தேவனைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறீர்கள். ஒவ்வொரு காலையிலும், ஒவ்வொரு இரவும், ஒவ்வொரு நாளும், எல்லா நேரத்திலும், தொடர்ந்து அவருடைய கரங்களில் இருங்கள். தொடர்ந்து தேடிக் கொண்டேயிருங்கள், தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருங்கள், தொடர்ந்து தட்டிக் கொண்டேயிருங்கள். சற்று நேரம் தட்டிக் கொடுத்து, சோர்வுற்று போய்விடாதீர்கள். அங்கே தொடர்ந்து நின்றுகொண்டு, "கர்த்தாவே, நான் இங்கிருக்கிறேன், நான் போகப்போவதில்லை. நான் இப்பொழுது உம்முடைய கரங்களில் இருக்கிறேன். நான் இங்கேயே தங்கப் போகிறேன். நீங்கள் கேட்டுச் சோர்ந்து போகிறீர்களா? தட்டுவதில் எனக்கு ஒரு மகத்தான நேரம் உண்டு, ஏனென்றால் நீர் வரப்போகிறீர் என்பதை நான் அறிவேன்" என்று கூறுங்கள். ஆமென். அப்பொழுதுதான் ஒன்று சம்பவிக்கிறது. அவர் உங்களை

அவருடைய கரத்திலிருந்து எடுக்க வேண்டியதாயிருக்கிறது, பாருங்கள், எனவே அவர் உங்களுக்குப் பதிலளிக்க வருகிறார். இப்பொழுது, விசுவாசம் இதைக் கண்டறிகிறது.

100 அவருடைய வார்த்தை ஒரு பட்டயமாகும். வேதம் எபிரெயர் 4:12-ல், அதாவது, "தேவனுடைய வார்த்தையானது இருபுறமும் கருக்குள்ள பட்டயத்திலும் கருக்கானதாயிருக்கிறது" என்று கூறுகிறது.

101 இப்பொழுது, ஒரே ஒரு காரியம் மாத்திரமே இந்தப் பட்டயத்தைப் பற்றிப் பிடிக்க முடியும். அதுதான் விசுவாசத்தின் கரம். விசுவாசம் என்னும் கரம் மாத்திரமே இந்த விசுவாசப் பட்டயத்தை, வார்த்தை என்னும் பட்டயத்தை அளிக்க முடியும். இப்பொழுது, நீங்கள் ஒரு பலவீனமான கரத்தை உடையவர்களாயிருக்கலாம், அது நீதிமானாக்கப்படுவதற்கு போதுமானதாக இருக்கலாம், நீங்கள் மிகவும் பலவீனமாயிருக்கிறீர்கள். ஒரு வேளை நீங்கள் வெட்டக்கூடியதெல்லாம் அவ்வளவுதான். ஆனால் இந்த வார்த்தை என்னும் பட்டயம் தேவன் அதில் அளித்துள்ள ஒவ்வொரு வாக்குத்தத்தத்தையும் வெட்டி விடுவிக்கும், அதை அங்கே பிடித்துக் கொண்டிருக்க, அவர்களுக்கு ஒரு நல்ல, வலுவான விசுவாசத்தின் கரம் அவர்களிடம் இருந்தால். "நான் என்னுடைய சுகமளித்தலுக்காகத் தேவனை விசுவாசிக்கிறேன். என்னுடைய ஞானஸ்நானத்திற்காக நான் தேவனை விசுவாசிக்கிறேன்." தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார், விசுவாசமானது இந்தப் பட்டயத்தை வைத்திருக்கிறது, அது அவளை அப்பால் உள்ள கன்மலையிலிருந்து வெட்டிவிடும். தேவனுடைய ஒவ்வொரு வாக்குத்தத்தமும் தேவனுடைய வார்த்தையினால் வெட்டப்பட முடியும், ஏனென்றால் அது ஒரு பட்டயமாயிருக்கிறது.

அவளுக்குப் பல தடைகள் இருந்தன, ஆனால் அவளுடைய விசுவாசத்திற்கு எந்தத் தடையும் இல்லை.

102 உங்களுக்கு ஏராளமான இடையூறுகள் இருக்கலாம். கிறிஸ்துவை சந்திக்கத் துவங்கும் ஒவ்வொரு நபரும் உங்களுக்கு ஏராளமான இடையூறுகளை உடையவர்களாயிருப்பதைக் கண்டறிவார்கள், ஆனால் உங்களுடைய விசுவாசம் எந்தத் தடையும் கொண்டிருக்கவில்லை. விசுவாசத்திற்கு எந்தத் தடையுமில்லை. விசுவாசம் தன்னுடைய மார்பில் உரோமங்களை, மகத்தான பெரிய தசைகளை உடையதாயிருக்கிறது.

காரண காரியங்கள் எழும்பி, "உங்களுக்குத் தெரியுமா, அது நியாயமானது" என்று கூறின.

103 விசுவாசம் அவனுடைய தசைகளைப் பின்னால் இழுத்து, அவனுடைய பெரிய மார்பை நீட்டி, "வாயை மூடு. உட்காரு" என்றது. பகுத்தறிவு ஒரு மூலையில் குதித்துச் சென்று தனது இருக்கையில் அமர்கிறது. சரி. விசுவாசம் தசைகளை

உடையதாயிருக்கிறது, அவன்—அவன் என்ன கூறுகிறான் என்பதைப் பொருட்படுத்துகிறது.

104 இன்றிரவு அதுதான் நமக்குத் தேவை. அதுதான் ஃபோர்ஸ்கொயர் சபைக்குத் தேவையாயுள்ளது. அதுதான் பெந்தேகோஸ்தே குழுவினருக்குத் தேவை. அதுதான் முழு உலகத்திற்கும் தேவை. அதுதான் எனக்குத் தேவை. அதுதான் உங்களுக்குத் தேவை. நாம் அதை ஒப்புக்கொள்ள வெட்கப்பட வேண்டும், ஆனால் தேவனுடைய வார்த்தையைப் பற்றிக் கொண்டு, அது உண்மையென்று கூறும் ஒரு விசுவாசமே நமக்குத் தேவை. பிசாசைச் சந்தித்து, "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்று கூறுங்கள்.

105 அன்றொரு நாள் ஒரு மனிதன் பிசாசு அவனுக்கு முன்பாகப் நின்றதாகக் கூறுவதை நான் வாசித்துக் கொண்டிருந்தேன். மேலும், "அவன் சின்னஞ்சிறு வயோதிக பிசாசாய் இருந்தான், எனவே அவன் 'பூ' என்று கூறினான்" என்றார்.

106 "நான் பின்னால் குதித்தேன்" என்றார். மேலும், "அவன், 'பூ' என்றான். "நான் பின்னால் குதிப்பேன். ஒவ்வொரு முறையும் அவன் 'பூ' என்று கூச்சலிடும்போது, நான் பின்னால் குதித்தால், அவன் பெரிதாகிக் கொண்டே போவான், நான் சிறிதாகிக் கொண்டே போவேன்" என்றார். மேலும், "அவன் தொடர்ந்து 'பூ' என்று கூறிக்கொண்டிருந்தான்" என்றார். மேலும், "ஒவ்வொரு முறையும் நான் பின்னால் குதிக்கும்போது நான் சிறியவனாய் மாறி, அவன் பெரிதாகிவிடுவான்" என்றார்.

107 மேலும், "சிறிது நேரம் கழித்து, நான் அவனுடன் சண்டையிட வேண்டியதாயிருந்தது என்பதை நான் அறிவேன்" என்றார். மேலும், "நான் சுற்றும் முற்றும் பார்த்து, 'என்ன?' என்று எண்ணினேன். நான் தேவனுடைய வார்த்தையைக் கண்டேன்." மேலும், "நான் அதை என் கையில் சுருட்டினேன். பிசாசு, 'பூ' என்றான். அதற்கு நான், திரும்பவும், 'பூ' என்றேன்" என்றார். மேலும், "நான், 'பூ' என்று கூறினபோது, ஒவ்வொரு முறையும் நான், 'பூ' என்று கூறினபோது, அவன் சிறியவனாகவும், நான் பெரியவனாகவும் ஆகிவிட்டேன்" என்றார். அதுதான். நீங்கள் விரைவிலோ அல்லது தாமதமாகவோ, அவனுடன் சண்டையிட வேண்டும்.

108 பிசாசு ஒன்று உண்டு என்று ஜனங்கள் விசுவாசிப்பதில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் அவனை எப்போதும், ஹூ-ஹூ, ஒவ்வொரு நாளும் அவனை நேருக்கு நேர் எதிர்கொள்கிறேன். வேறு எந்த விசுவாசியும் அப்படித்தான். ஆம், நீங்கள் விரைவிலோ அல்லது தாமதமாகவோ, அவனுடன் சண்டையிட வேண்டும், எனவே நீங்கள் இப்பொழுதே துவங்கலாம். அவன் ஒரே ஒரு காரியத்தைக் குறித்து மாத்திரமே பயப்படுகிறான், அந்த இரத்தமும், வார்த்தையும் தான். விசுவாசம் அதைப் பற்றிக்கொண்டிருக்கிறது. அது பலமுள்ளதாய், அணிவகுத்துச் செல்கிறது.

109 இப்பொழுது, இந்தச் சிறிய கிரேக்க ஸ்திரீ, நான் கூறினது போல, அவள் அநேக இடையூறுகளை உடையவளாயிருந்தாள் என்பதை நாம் கண்டறிகிறோம், ஆனால் அவளுடைய விசுவாசத்திற்கு எந்தத் தடையும் இல்லை. விசுவாசத்திற்கு எந்தத் தடையும் கிடையாது. அவர்கள் அவளிடம், "நீ ஒரு கிரேக்கத்தாள் என்று உனக்குத் தெரியுமா? நீ—நீ—நீ ஒரு கிரேக்கத்தாள். நீ அவருடைய ஸ்தாபனத்தைச் சார்ந்திருக்கவில்லை என்பதை நீ அறிவாய். அங்கே அந்தக் கூட்டத்திற்கு செல்ல வேண்டாம்" என்றனர்.

110 இப்பொழுது, அது தடைகளில் ஒன்றாகும். பார்த்தீர்களா? ஆனால் உங்களுக்கு விசுவாசம் இருக்குமானால், நீங்கள் எப்படியும் போய்க் கொண்டிருக்கிறீர்கள். அவர் எந்த ஸ்தாபனத்தில் இருந்தாலும், அது எந்த வித்தியாசத்தையும் உண்டுபண்ணுகிறதில்லை, அவர் அங்கே இருந்தால் மட்டும் போதும்.

111 அவளுக்கு ஒரு தேவை இருந்தது. அவளுக்குக் காக்காய் வலிப்பினால் மரித்துக் கொண்டிருந்த ஒரு மகள் இருந்தாள். அவள் அவரண்டை செல்ல வேண்டியதாயிருந்தது, ஏனென்றால் வைத்தியர்களால் அவளுக்கு ஒன்றுமே செய்ய முடியவில்லை. இன்னமும் அதைச் செய்ய முடியவில்லை. எனவே அவள் இயேசுவிடம் செல்ல வேண்டியதாயிருந்தது. அந்தவிதமான வியாதிகளை அவர் சுகப்படுத்தினார் என்று அவள் கேள்விப்பட்டிருந்தாள்.

112 "சரி," அவர்கள், "அவர், அவர்—அவர் இல்லை...அவர் ஒருபோதும் உங்களுடைய ஸ்தாபனங்களுக்கு எழுப்புதலோடு வரவில்லை" என்றனர். அது அவளைத் தடுக்கவில்லை. அந்தச் சிறிய ஸ்திரீக்கு விசுவாசம் இருந்தது. அவள் விடாப்பிடியாக இருந்தாள். அவள் அந்தக் குழுவைக் கடந்து சென்றாள். அவளுடைய விசுவாசம் அவளை அதிலிருந்து விலக்கிற்று.

113 ஓ, இன்று அவர்களால் அதை மட்டும் செய்ய முடிந்தால் போதும்! யாரோ ஒருவர், "இன்றிரவு ஃபோர்ஸ்கொயர் சபையில் ஒரு கூட்டம் இருக்கிறது" என்று கூறுகிறார்.

114 "பாருங்கள், அது உங்களுடைய ஸ்தாபனத்தைச் சேர்ந்ததல்ல. நீங்கள் அங்கிருந்து விலகி இருப்பது நல்லது."

115 அப்படியே தொடர்ந்து செல்லுங்கள். உங்களுடைய விசுவாசம் உங்களைச் சரியான பாதையில் கொண்டு செல்கிறது. பார்த்தீர்களா? விசுவாசத்திற்கு எந்தத் தடையுமில்லை. அது எப்படியும் செல்கிறது. எதுவுமே அதைத் தடுத்து நிறுத்தப் போவதில்லை. நான் கூறினது போல, அது தைரியமான, பெரிய தசைகள். அது அதிகாரத்தைப் பெற்றுள்ளது; மற்றவர்கள் அதைக் குறித்து பயப்படுகின்றனர். ஆம், ஐயா. அவர்கள் பெரியம்மை நோயைப் போல அதிலிருந்து ஓடிவிடுவார்கள். அவர்கள் அப்படியே விலகிச் போய்விடுவார்கள்.

அதற்கும் இதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை, பெரிய விசுவாசம் எழும்பும்போது, “நான் யாரை விசுவாசிக்கிறேன் என்பதை நான் அறிந்திருக்கிறேன்” என்று கூறுகிறது. அதுதான்.

116 “அற்புதங்களின் காலம் முடிந்துவிட்டது” என்று சொல்லக்கூடிய மற்றொரு குழுவும் வந்திருக்கலாம். அப்படிப்பட்ட ஒரு காரியமே கிடையாது. அங்கே இருப்பவர்கள் ஒரு கூட்ட பரிசுத்த உருளைகள், அவர்கள் யூதர்கள். நாங்கள் கிரேக்கர்கள். நாங்கள் அறிவாளிகளாயிருக்கிறோம். நாங்கள் அறிவார்ந்த குழுவான ஜனங்கள். நாங்கள் உலகத்திற்கு கலையையும், இசையையும், மார்க்கத்தையும் அளிக்கிறோம். அதைப் போன்ற அப்படிப்பட்ட ஒரு காரியமே கிடையாது.”

117 ஆனால் அவள் விடாப்பிடியாக இருந்தாள். அவளுக்கு அற்புதங்களின் நாட்கள் கடந்துபோகவில்லை, ஏனென்றால் அவளுக்கு *இங்கே* செய்திருந்த ஏதோ ஒன்று, அது கடந்துவிடவில்லை என்று கூறியிருந்தது. அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததை இயேசு உடையவராயிருந்தார், அவள் அவரண்டை செல்லத் தீர்மானமாயிருந்தாள். அவளுடைய ஸ்தாபனம் அதற்கு ஆதரவளித்தாலும் அல்லது இல்லையென்றாலும் பொருட்படுத்தாமல், அவள் எப்படியும் சென்றுகொண்டிருந்தாள். அவள் அங்குச் செல்லப் போவதாயிருந்தாள். அவள் விடாமுயற்சியுடன் இருந்தாள், இன்னமும் விடாமுயற்சியுடன் இருந்தாள். அவர்களுக்கு அற்புதங்களின் நாட்கள் கடந்துபோயிருக்கலாம், ஆனால் அவளுக்கு அதுவல்ல. அந்தவிதமாகத்தான் அது ஒவ்வொரு விசுவாசியோடும் உள்ளது. அந்த ஜனங்கள் அற்புதங்களின் நாட்களைக் கூறுகிறார்கள்...

118 கொஞ்சங் காலத்திற்கு முன்னர் ஒரு மனிதன் என்னிடத்தில், “திரு. பிரான்ஹாம், நீர் என்னக் கூறினாலும் எனக்குக் கவலையில்லை” என்று கூறினார். மேலும், “தெய்வீக சுகமளித்தல் என்ற அப்படிப்பட்ட ஒரு காரியம் இருப்பதாக நான் நம்புகிறதில்லை” என்றார்.

119 நான், “நிச்சயமாக, உனக்கு இல்லை. அது அவிசுவாசிகளுக்கானதாயிருக்கவில்லை. விசுவாசிக்கிறவர்களுக்காகவே. அது உண்மை. அவிசுவாசிகளுக்கு அனுப்பப்படவில்லை. அது விசுவாசிகளுக்கு அனுப்பப்பட்டது. உங்களால் அதை அனுபவித்து மகிழ முடியாது, ஏனென்றால் அதைக் குறித்து உங்களுக்கு ஒன்றுமே தெரியாது” என்றேன்.

120 அவர் என்னிடத்தில், “பரிசுத்த ஆவி என்ற அப்படிப்பட்ட ஒரு காரியமே இல்லை” என்று கூற விரும்பினார்.

121 அதற்கு நான், “நீர் ஏறக்குறைய முப்பத்தி மூன்று ஆண்டுகள் தாமதமாகிவிட்டீர்” என்றேன். நான், “எனக்கு நன்றாகத் தெரியும். நான் அதைப் பெற்றுக் கொண்டேன்” என்றேன்.

"ஓ, அர்த்தமற்றது!"

122 நான், "உங்களுக்கு, அது ஒருவேளை அப்படி இருக்கலாம், ஆனால் எனக்கு அப்படி இல்லை. அது எனக்கு உண்மையாகவே இருக்கிறது. அது ஜீவன், ஏதோ ஒன்று நங்கூரமிடப்பட்டிருக்கிறது" என்றேன். அவர் என்னிடம் அதைக் கூற மிகவும் தாமதமாக வந்தார்.

123 அவர்கள் தெய்வீக சுகமளித்தலைக் குறித்து நமக்குக் கூற மிகவும் காலதாமதமாக வந்துள்ளனர். நாம் சுகமடைந்துவிட்டோம். நாம் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கிறோம். நாம் எடுத்துக்கொள்ளப்படுதலின் கிருபையைப் பெற்றுவிட்டோம். ஆமென். அந்தக் காரியங்கள் எதற்கும் இது மிகவும் காலதாமதமாகிவிட்டது. அவர்கள் வாயை மூடிக்கொள்ளலாம். நாம் அதைப் பெற்றுவிட்டோம். நம்முடைய விசுவாசம், "அங்கே உட்காருங்கள். நான் எதைக் குறித்து பேசிக்கொண்டிருக்கிறேன் என்பதை நான் அறிவேன்" என்று கூற முடியும்.

"சரி, வேத பண்டிதர் *இன்னார்*-..."

124 வேத பண்டிதர் *இன்னார்-மற்றும்-இன்னார்* என்ன கூறினார் என்று நான் கவலைப்படுகிறதில்லை, வேதம் அதைக் கூறியுள்ளது, நான் என்னுடைய கரத்தில் அந்தப் புத்தகத்தின் பேரில் விசுவாசம் வைத்திருக்கிறேன். என்னுடைய விசுவாசம், "இயேசு வருகிறார். நான் பரிசுத்த ஆவியைப் பெற்றேன் என்று நான் விசுவாசிக்கிறேன், ஏனென்றால் அவர் என் ஜீவியத்தில் ஜீவிக்கிறதை நான் காண்கிறேன்" அதை அங்கே பிடித்து வைத்திருக்கிறது. ஆமென். அது வார்த்தையின்படியாயுள்ளது. ஒன்றுமில்லை...ஒரு வெளிப்படுத்தப்பட்ட வெளிப்பாடு, வேதம் சரியாயிருக்கிறது என்பதற்கு ஒரு பரிபூரண ரூபகாரப்படுத்துதல், இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். அவர்கள் அதைக் கேலி செய்து சிரித்துத் தள்ளட்டும். அவர்களுக்கு வேண்டியமட்டும் சிரிக்கட்டும். நோவா, மோசே மற்றும் பிற போலி நபர்கள் எழுந்திருந்த காலத்தில் அவர்கள் இருந்ததைப் போலவே நாங்களும் விடாமுயற்சியுடன் இருப்போம்.

125 யந்நேயும் யம்பிரேயும் தங்களுடைய கோலைக் கீழே வீசியெறிய, ஒரு சர்ப்பமாக மாறின. அந்த மனிதர்கள், அவர்களால் முடிந்தளவு கனமுள்ளவர்கள், தேவன் அவர்களிடம் என்ன செய்யும்படி கூறினாரோ அதை அப்படியே செய்தனர், ஒரு கூட்டம் ஆள்மாறாட்டம் செய்து, தங்களுடைய கோல்களைக் கீழே வீசினர். அவர்கள் செய்ய முடிந்த ஒரே காரியம், அப்படியே நின்று தேவனுடைய மகிமையைக் காண்பதேயாகும். ஆமென்.

126 தேவன் அதற்குத் துணை நிற்பார். அவர் உங்களை அனுப்பியிருந்தால், நீங்கள் அதைக் குறித்து நிச்சயமுடையவர்களாயிருந்தால், நீங்கள் செய்யத் தேவன் முன்குறித்திருந்த கிரியையை நீங்கள் அடையப் போகிறீர்கள்.

நீங்கள் அங்கே நிற்பீர்கள், மாம்சபிரகாரமாகப் பாவனை செய்யும் ஒவ்வொருவரையும் தேவன் உங்களிடத்திலிருந்து எடுத்துப் போடுவார். சரி. அங்கே நில்லுங்கள். நீங்கள் விடாமுயற்சியுள்ளவர்களாயிருக்க முடியும், ஏனென்றால் நீங்கள் யாரை விசுவாசித்திருக்கிறீர்கள் என்றும், எது சரியென்றும் அறிந்திருக்கிறீர்கள். வார்த்தையைக் கொண்டு உங்களுடைய வெளிப்பாட்டை ஆராய்ந்து பாருங்கள். அது வார்த்தைக்கு முரணாக இருக்குமானால், அதை அப்படியே விட்டுவிடுங்கள். அது வார்த்தையோடு இருக்குமானால், தேவன் அவருடைய வார்த்தையைக் காத்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறார்.

127 இப்பொழுது, இப்பொழுது, உங்களுக்குத் தெரியும், ஒரு கூட்ட பெண்மணிகள் அங்கே மூலையில் நின்றிருக்கலாம். அவர்களோ, "இதோ அவள் வருகிறாள். இப்பொழுது அவள் காக்காய் வலிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள அந்தப் பிள்ளையை அங்கே வைத்திருக்கிறாள். மேலும்—மேலும் மருத்துவர் *இன்னார்-இன்னார்* காக்காய் வலிப்புக்கு மருந்து இல்லை என்று கூறினார். இதோ அவள் அங்குள்ள பெயரில்லாத ஸ்தாபனத்திற்கு சென்று கொண்டிருக்கிறாள், அந்த மதவெறி கொண்ட தீர்க்கதரிசி இங்கு வந்து அந்தக் குழந்தையைச் சுகப்படுத்துவதற்காக" என்றனர். எனவே அவர்கள், "நாங்கள் சூசியை நிறுத்த வேண்டும்" என்றனர். இங்கே சூசி என்ற ஒரு குழந்தை இல்லை என்று நான் நம்புகிறேன். "ஆனால் நாம் சூசியை நிறுத்தி அவளிடம் கூற வேண்டும், ஏனென்றால் அவள் ஒரு நல்ல ஸ்திரீயாக இருந்து வருகிறாள். அவளுடைய வாழ்க்கைக்கு எதிராக ஒன்றுமேயில்லை. ஆனால் நாம் அவளைத் தடுக்க நிறுத்த வேண்டும், அது மட்டுமே எனக்குத் தெரிந்த ஒரே வழி. அவள் இந்தத் தடையை உடைக்காதபடிக்கு, அவள் எல்லோரையும் கடந்து சென்றுவிட்டாள்.

128 "சூசி, என்னவென்று உனக்குத் தெரியுமா? உங்களுடைய கணவர் உங்களை விட்டுச் சென்றுவிடுவார். ஏனென்றால் அவர் ஒரு தர்மகர்த்தா அல்லது நிர்வாகக் குழுவில் ஒரு உதவிக்காரராக இருக்கிறார், நீங்கள் அங்குச் சென்றால், அவர் உங்களை விட்டுப் போய்விடுவார்."

129 அவள் அப்பொழுதும் விடாப்பிடியாக இருந்தாள். அவள் தொடர்ந்து சென்றாள். பார்த்தீர்களா? விசுவாசம் எந்தத் தடையையும் அறியாது. அது அங்குச் சென்றடைய வேண்டும்.

130 அவள் மற்றொரு குழுவைக் கடந்து சென்று, "என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் தோற்கடிக்கப்பட்டு திரும்பி வரும்போது, அதில் ஒன்றுமே இல்லை என்பதைக் கண்டறியும்போது, அக்கம்பக்கத்தில் உள்ள யாவரும் உன்னைப் பரிகசிப்பார்கள்" என்று கூறுகிறது.

131 அதனால் அவளுடைய காதுகள் சிவக்கக்கூட இல்லை. அவள்

விடாப்பிடியாக இருந்தாள். அவள் தொடர்ந்து சென்றாள். நான் அதை விரும்புகிறேன். நான் அந்த விடாமுயற்சியை விரும்புகிறேன்.

132 அப்பொழுது இங்கே உதவிக்காரர்களில் ஒருவன் நின்று கொண்டு, "நீங்கள் அங்குச் சென்றால், அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? உன்னை உன்னுடைய சபையிலிருந்து வெளியே தள்ளிவிடுவார்கள், ஏனென்றால் நீ உன்னை உருளும் பரிசுத்தரோடு அல்லது அந்த ஜனங்களோடு இணைத்துக் கொண்டிருக்கிறாய்" என்றார். மேலும், "உங்களுக்குத் தெரியுமா..." என்றார். என்னை மன்னிக்கவும். அதை ஒருக்கால் கூறாமல் இருந்திருக்கலாம். பார்த்தீர்களா? "அவர்களோடு நீ உன்னை இணைத்துக் கொண்டால், நீ உன் சபையை விட்டு வெளியே தள்ளப்படுவாய்."

133 அவள் அப்பொழுதும் விடாப்பிடியாக இருந்தாள். விசுவாசம் தோல்வியை அறியாது. அவள் ஒரு காரியத்தை அடைய வேண்டியதாயிருந்தது, அது இயேசுவிடம் சென்றடைய வேண்டியதாயிருந்தது. அவளுக்கு ஒரு தேவை இருந்தது, அவர் ஒருவரே அந்தத் தேவையை உடையவராயிருந்தார்.

134 சகோதரனே, சகோதரியே, இன்றிரவு நான் இதைக் கூறுகிறேன். எனக்கு ஐம்பத்து மூன்று வயதாகிறது. நான் சுமார் இருபது வயதிலிருந்தே அவரைச் சேவித்துக் கொண்டிருக்கிறேன். எனக்குத் தேவையாயிருந்த எல்லாவற்றையும் அவர் சந்தித்திருக்கிறார். என்னுடைய மரண நேரம் வரும்போது, ஆற்றைக் கடந்து செல்ல எனக்கு இரண்டு செட்டைகள் தேவையாயிருந்தால், அவர் அங்கிருப்பார் என்று நான் நிச்சயம் நம்புகிறேன். நீங்கள் கவலைப்படாதீர்கள். அவர் அங்கிருப்பார் என்பதை நான் அறிவேன். நான் பழைய பட்டயத்தை உறையில் பதித்து, தலைச்சீராவை கழற்றி, அதை ஆற்றண்டையில் வைத்து, நான் கரைக்குத்...விரைந்து வருபவர்களின் சத்தத்தைக் கேட்கும்போது, அப்பொழுது நான், "ஒரு ஜீவப் படகை அனுப்புங்கள். நான் இன்று காலை வீட்டிற்கு வருகிறேன்" என்று சத்தமிடுவேன். அது அங்கிருக்கும். ஆம், ஐயா. விடிவெள்ளி நட்சத்திரம் இறங்கி வந்து வழியைப் பிரகாசிக்கும். நாம் ஆற்றைக் கடந்து செல்வோம். ஆம், ஐயா. ஆமென்.

135 அவள் விடாப்பிடியாக இருந்தாள். அவள் ஒரு சாதனை படைத்திருந்தாள். இயேசுவிடம் செல்வதற்கு அவள் விடாமுயற்சியுடன் இருக்க வேண்டும் என்பதை அவள் அறிந்திருந்தாள், எனவே அவள் எல்லாவற்றையும் கடந்து செல்ல வேண்டியதாயிருந்தது.

136 முடிவில் அவள் வந்தாள். இப்பொழுது, முடிவாக, இங்கே வந்துவிட்டாள். இப்பொழுது எல்லாம் நன்றாக உள்ளது, அப்பொழுது இங்கே மற்றொரு தடை வருகிறது. அவள் நம்பிக்கை

கொண்டிருந்ததாக அறிக்கை செய்த அதே மனிதன், அவள் அணுக முயன்ற மனிதர், இயேசு. அதற்கு அவர், "நான் உங்களுடைய இனத்திற்கு அனுப்பப்படவில்லை" என்றார். ஓ, என்னே! அது பெந்தேகோஸ்தேயினராகிய நம்மைக் கோபமூட்டாதா? ஊம்! ஊம்! என்னே! "நான் உங்களுடைய இனத்திற்கு அனுப்பப்படவில்லை." வ்யூ! அது ஒரு அதிர்ச்சியாயிருந்தது.

ஆனால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? விசுவாசம் எந்த அதிர்ச்சியையும் அறியாது.

137 அதன்பின்னர், மீண்டும், அவர் திரும்புகிறார். இந்த எல்லாக் காரியங்களினூடாகவும் அவள் கடந்து சென்றபிறகு, அவளுடைய விசுவாசத்தைப் பற்றிக்கொண்டு, இயேசுவானவருக்கு அவளுடைய வாஞ்சையை அளிக்க முடியும் என்பதை அவள் அறிந்திருந்தாள். அவள் இந்தத் தடைகள் ஒவ்வொன்றினூடாகவும் சென்றாள். அவள் அவரண்டை வந்தபோது, "உம்முடைய இனத்தோடு கூட நான் அனுப்பப்படவில்லை" என்று திட்டவட்டமாகக் கூறிப் புறக்கணித்தார்.

138 அவள் அங்கே நிற்பதையும், அவளுடைய கண்கள் மின்னுவதையும் என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. அப்பொழுது அவள்—அவள் அவருக்கு முன்பாக இருந்தாள். அவள் அப்படித்தான் இருக்க வேண்டியதாயிருந்தது. மேலும், "அது தவிர, உன்னுடைய இனம் ஒரு கூட்ட நாய்களைத் தவிர வேறொன்றுமில்லை" என்றார். ஓ, என்னே!

139 அவர் அதை உங்களிடத்தில் கூறியிருந்தால் என்னவாகும்? நீங்கள், "நான் இந்த ஃபோர்ஸ்கொயரில் உள்ள என்னுடைய ஆவணங்களை எடுத்துக்கொண்டு வேறொரு இடத்திற்கு செல்வேன். நான் மீண்டும் அங்குச் செல்லமாட்டேன். நான் அதை *இன்னார்-மற்றும்-இன்னாரிடமிருந்து* எடுத்துக் கொள்வேன்" என்று கூறியிருப்பேன். ஓ, ஆம். ஆம், ஐயா.

140 ஆனாலும் அவள் நிலைத்திருந்தாள். ஓ! பார்த்தீர்களா? விசுவாசம் தோல்வியை அறியாது. அதை எதுவும் தடுத்து நிறுத்த முடியாது. அவள் தேடி வந்த அதே இயேசு அவளிடம், "நான் உங்களுடைய இனத்திற்கு அனுப்பப்படவில்லை, அவர்கள் ஒரு கூட்ட நாய்களைத் தவிர வேறொன்றுமில்லை" என்று கூறியிருந்தபோதிலும், வ்யூ! ஆனால் என்ன? அவளுக்கு உண்மையான விசுவாசம் இருந்தது. விசுவாசம் தோல்வியை அறியாது; அது எங்கிருந்து வந்தாலும் எனக்குக் கவலையில்லை. தோல்வியை அறியாது, ஏனென்றால் அவள் விசுவாசத்தை உடையவளாயிருந்தாள். அவள் இன்னமும் பற்றிக்கொண்டிருந்தாள். ஓ! நான் அதை விரும்புகிறேன். அது இன்றைக்கு அவர்களில் சிலரைப் போல, செயற்கை வெப்பமூட்டப்பட்ட, ஒரு கலப்பின தாவரமாக இருக்கவில்லை.

141 இந்தக் கலப்பின மார்க்கங்களை இன்றைக்கு நாம் பெற்றுள்ளோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர்கள் நல்லவர்கள் அல்ல. இப்பொழுது எல்லாமே கலப்பினமாய், கலப்பினமாகவே உள்ளன. அவர்களும் கூடக் கலப்பின சபைகளை உடையவர்களாயிருந்தனர், கலப்பின கிறிஸ்தவர்கள், கரங்களைக் குலுக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தனர். ஓ, அவர்களால் நன்றாக உடை உடுத்த முடியும், ஒரு வேளை சிறந்த ஆங்கிலத்தை உபயோகிக்கலாம், அது போன்று இருக்கலாம். அதில் ஜீவன் இல்லை.

142 நீங்கள் ஒரு பெரிய நேர்த்தியான கலப்பினமான சோளக் கதிர்களை எடுத்துக் கொண்டால், சோளக் கதிரானது மற்றொன்றை விட இருமடங்கு அழகாக இருக்கலாம். அதை நடவு செய்தால் அது மரித்துவிடும். அதில் உயிர் இல்லை. அது உண்மை.

143 நமக்குக் கலப்பினமான எதுவும் வேண்டாம். நமக்கு அசலான காரியம் வேண்டும். நீங்கள் அதைப் பெற்றிருக்கவில்லை, அது வரும் வரை அங்கேயே இருங்கள். பெந்தேகோஸ்தே வானங்கள் உண்மையானவைகளால் நிறைந்திருக்கும்போது, ஏன் ஒரு பதிலியை ஏற்றுக்கொள்ள வேண்டும்? பார்த்தீர்களா? கலப்பினமானது எதுவுமில்லை, அது நிலைத்து நிற்காது.

நீங்கள் எப்பொழுதுமே ஒரு கலப்பின செடியில் பூச்சிகள் வராமல் இருக்க தெளிக்க வேண்டும்.

144 அந்தவிதமாகத்தான் இந்தக் கலப்பின கிறிஸ்தவர்கள் சிலரும் உள்ளனர். நீங்கள் அவர்களைக் குழந்தையாகப் போல வைத்து, அவர்களைச் செல்லமாக வளர்த்து, அவர்கள் உதவிக்காரராகவோ அல்லது வேறு ஏதோ காரியமாகவோ இருப்பார்கள் என்று அவர்களுக்கு வாக்களிக்க வேண்டும், அவிசுவாசமாகிய உலகப்பிரகாரமான பிழைகள் சிலவற்றை அவர்களிடமிருந்து விலக்கிக் கொள்ள வேண்டும். “அவர்கள் சபையை விட்டு வெளியேறிவிடுவார்கள்.” எப்படியாயினும் அவர்களை வெளியே உதைத்துத் தள்ளுங்கள். அது உண்மை. அவர்கள் ஒருபோதும் உள்ளே இருக்கவில்லை.

145 நீங்கள் ஒரு சபையில் சேர்ந்துகொள்ள முடியாது. நீங்கள் ஒரு விடுதியில் சேரலாம். நீங்கள் மெத்தோடிஸ்டு விடுதியில், பாப்டிஸ்டு விடுதியில் அல்லது பெந்தேகோஸ்தே விடுதியில் சேர்ந்து கொள்ளலாம். ஆனால் நீங்கள் எப்போதாவது கிறிஸ்துவண்டை வருவீர்களேயானால், அப்பொழுது நீங்கள் சபைக்குள்ளாகப் பிறப்பீர்கள், அது உண்மை, கிறிஸ்துவின் காணக்கூடாத சரீரத்தில். மற்றவை விடுதிகளாக இருக்கின்றன. அது உண்மை. அது சரிதான், அவர்களுக்கு எதிராக ஒன்றுமேயில்லை. ஆனால் நீங்கள் தேவனுடைய ஆவியினால் ஜீவனுள்ள தேவனுடைய சபைக்குள் பிறந்திருக்கிறீர்கள். நீங்கள் அதில் சேரவே முடியாது. நீங்கள் அங்கே பிறக்கும்போது, நீங்கள் ஒரு பிறப்பைப் பெற்றுக் கொள்கிறீர்கள்.

146 நீங்கள் இனிமேல் ஒரு கலப்பினமல்ல, கைகோர்த்துச் செல்பவரோ, அல்லது வழிப்போக்கரோ அல்ல. ஹூ-ஹூ. உங்களுக்குத் தெரியும், ஒரு வழிப்போக்கர் எப்பொழுதுமே கட்டைவிரலை அசைத்துக் கொண்டேயிருக்கிறான். அதுதான் வழி. "சரி, எனக்குத் தெரியும், ஆனால் வேத பண்டிதர் *இன்னார்-மற்றும்-இன்னார்*..." இல்லை, இல்லை. அதுதான். அதுதான். அது சரியாகத்தான் உள்ளது.

அவள் விடாப்பிடியாக இருந்தாள். அவள் ஒரு கலப்பினமாயிருக்கவில்லை. நீங்கள் அவள்மேல் வாசனைத் திரவியத்தைத் தெளித்து, அவளைச் சரிப்படுத்த வேண்டியதில்லை. அவள் அங்கேயே நின்றாள்.

147 இன்றைக்கு நம்முடைய பயிரின் ஒரு பாகம், அவைகளில் அநேகம் கலப்பினங்களாகும். டேவிட் டூப் பிளெஸ்ஸிஸ் போன்ற ஒரு காரியம், ஒருமுறை, "தேவனுக்கு பேரப்பிள்ளைகள் கிடையாது" என்று கூறினார் என்று நினைக்கிறேன்.

148 நம்முடைய பெந்தேகோஸ்தே இயக்கத்தோடுள்ள தொல்லை, நாம் பெந்தேகோஸ்தே பேரப்பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். நம்முடைய தகப்பன்மார்களும் தாய்மார்களும் பெந்தேகோஸ்தேயினராயிருந்த காரணத்தால் அவர்கள் உள்ளே வருகிறார்கள். நாம் அவர்களைக் குழந்தை தொட்டில் பட்டியலில் சேர்த்துக்கொண்டோம், அவர்கள் அனுபவமின்றி வளர்கிறார்கள். அங்கே அவர்களும் கூடப் பெந்தேகோஸ்தேயினர் என்று கூறுகிறார்கள். இல்லை ஐயா. தேவனுக்கு பேரப்பிள்ளைகள் கிடையாது. அவர் தாத்தா அல்ல; அவர் பிதாவாயிருக்கிறார். சரி. நீங்கள் எப்போதாவது பரலோகம் சென்றால், உங்களுடைய தாயார் செலுத்தின கிரயத்தை, உங்களுடைய தகப்பனார் செலுத்தியது போல, நீங்களும் செலுத்துவீர்கள். ஆமென். அது அசுத்தமாகத் தென்படலாம், ஆனால் அது சத்தியமாயிருக்கிறது. அது ஒரு கருத்தைக் கூறுவதற்கே பண்பாடற்ற வழி, ஆனால் நீங்கள் அந்த விதமான ஆங்கிலத்தை புரிந்து கொள்வீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அது மிகவும் நல்ல ஆங்கிலம் அல்ல. அது நான் கூற முயற்சிக்கும் முக்கியத்துவத்தைப் பெறுகிறது. நீங்கள் அதற்குச் செவிகொடுங்கள். ஆம்.

149 அவள் ஒரு கலப்பினமாயிருக்கவில்லை. அவள்மேல் தெளிக்கப்பட்டு, இப்பொழுது குழந்தையைப் போல் பராமரிக்க வேண்டியதில்லை, "சரி, இப்பொழுது, அருமையான சகோதரியே, நான்—நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், சரி..." ஓ, இல்லை. இல்லை ஐயா.

150 எது அவளை வீழ்த்தினாலும் கவலைப்படாமல், அவள், "அது உண்மை. நாங்கள் ஒரு கூட்ட நாய்களைத் தவிர வேறொன்றுமில்லை. நாங்கள் அதற்குத் தகுதியற்றவர்கள் என்பது

உண்மையே" என்றாள். ஓ, என்னே! அவர் சரியாயிருந்தார் என்பதை அவள் ஒப்புக்கொண்டாள்.

151 நான் ஒரு பெரிய விஷயத்தைச் சொல்லப் போகிறேன். ஆயத்தமாகுங்கள். ஒவ்வொரு முறையும் அசலான விசுவாசம் வார்த்தை சரியென்று ஒத்துக்கொள்ளும். எந்த நேரத்திலும், அற்புதங்களின் நாட்கள் கடந்துவிட்டன என்றோ, அல்லது வேதாகமத்திற்கு விரோதமான ஏதோ ஒன்றை ஏதோ ஒன்று கூறினால், அது உண்மையான விசுவாசம் அல்ல. விசுவாசம் எப்பொழுதுமே சத்தியத்தை ஒத்துக்கொள்ளும். நீங்கள் வார்த்தையோடு தரித்திருக்க வேண்டும். வேறு எதைக் கூறினாலும், மற்றவர்கள் என்ன கூறினாலும் அது ஒரு பொருட்டல்ல, வார்த்தையே சரி. "எந்த மனுஷனுடைய வார்த்தையும் பொய்யாயும், என்னுடைய வார்த்தை சத்தியமாயும் இருப்பதாக. எவனாவது அதிலிருந்து எதையாவது கூட்டினாலோ, அல்லது அதிலிருந்து எடுத்துப் போட்டாலோ, அவனுடைய பங்கு ஜீவ புத்தகத்திலிருந்து எடுத்துப் போடப்படும்."

152 தேவன் உலகத்தை ஒரு சபையைக் கொண்டு நியாயந்தீர்க்கப் போகிறாரா? எந்த ஒன்று? கத்தோலிக்கரா? அறுநூற்று அறுபதுக்கும் மேற்பட்ட வித்தியாசமான ஸ்தாபனங்களைக் கொண்டா? அவர் அதை எப்படிச் செய்யப் போகிறார்?

153 தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு உலகத்தை நியாயந்தீர்க்கப் போகிறார். கிறிஸ்து, "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம்பண்ணினார்." தேவனும் வார்த்தையும் ஒன்றே. இது அச்சடிக்கப்பட்ட தேவனாகும்.

154 நீங்கள்—நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுள்ளீர்களா? அந்த விதையை அங்கே விதையுங்கள். அது அதை ஜீவனுக்கு கொண்டு வந்து, அந்த ஜீவனை உடைத்து, அதை வெளிப்படுத்தி, அதை ரூபகாரப்படுத்துகிறது. இயேசு பரிசுத்த யோவான் 12-ல், "என்னை விசுவாசிக்கிறவன்..." என்றார். பரிசுத்த யோவான் 14:12, சரியாகக் கூறினால், "நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான்." எனவே அது எப்பொழுதுமே சத்தியத்தை ஒத்துக் கொள்கிறது. ஓ, என்னே!

155 ஆனால், உங்களுக்குத் தெரியும், அவள், "அது உண்மைதான். நாம் ஒரு கூட்ட நாய்களைத் தவிர வேறொன்றுமில்லை. நாங்கள்... நீர் உண்மையாகவே எங்களிடம் அனுப்பப்படவில்லை. ஆனால், கர்த்தாவே, பிள்ளைகளுடைய எல்லா அப்பத்தையும் நான் எதிர்நோக்கிக் கொண்டிருக்கவில்லை. நான் துணிக்கைகளை மாத்திரமே தேடிக்கொண்டிருக்கிறேன்" என்றாள். ஓ, என்னே!

156 நீங்கள் கவனியுங்கள், ஜனங்கள், அவர்கள் *இதைப்*

பெற்றுக்கொள்ளவும், சுகமடையவும், அவர்கள் அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறவிதமாகப் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளவும் விரும்புகிறார்கள். "இப்பொழுது, சகோதரனே, நீங்கள் என்னைக் கொண்டு வந்து, யாரும் என்னைக் காணாத ஒரு அறைக்கு அழைத்துச் செல்வீர்களானால், நீர் உம்முடைய கரங்களை என்மீது வைத்து, என்னை ஆசீர்வதித்து, பரிசுத்த ஆவியை எனக்குள் வையுங்கள். நான் அதை ஏற்றுக் கொள்வேன்" என்கின்றனர். ஓ, இல்லை.

157 நாகமான் ஒரு சமயம் அந்தவிதமாகத் தன்னுடைய சுகமளித்தலை ஏற்றுக்கொள்ள விரும்பினான். ஆனால் எலியாவோ அவனை அங்கே பழைய சேற்றான யோர்தானில் சென்று ஏழு முறைகள் முழுக்கும்படிக் கூறினான். அவன் தன்னுடைய இரதத்திலிருந்து இறங்குவதை என்னால் காண முடிகிறது. ஓ, ஒரு மகத்தான மனிதன், தன்னுடைய மூக்கைப் பிடித்துக் கொண்டான். இதோ அவன் தண்ணீருக்குள் வருகிறான், கரும்புப்பாகுவில் இறங்கிய பூனையைப் போலக் கால்விரல் நுனியில் நடந்து, *இப்படி* வெளியே வருகிறான், உங்களுக்குத் தெரியும், *அந்த* விதமாக வெளியே சென்று, தண்ணீரில் இறங்குவது. அதற்கு அவன், "ஓ, நான் இதைச் செய்ய வெறுக்கிறேன்" என்று சொல்லிவிட்டு சட்டென்று கீழே இறங்கினான். சில ஜனங்கள் பீடத்தண்டை வருவது அவர்களுக்கு ஒரு சுகவீனமான விவகாரமாயிருந்தது போன்று உள்ளது. ஆம். "ஓ, நான் அதைச் செய்ய விரும்பவில்லை."

அவன் ஒரு முறை மூழ்கினான், பிறகு, "எனக்கு இன்னும் குஷ்டரோகம் இருக்கிறது."

158 "'ஏழு தரம்' என்று தீர்க்கதரிசி கூறினான்." சரி. அவன் வார்த்தைக்கு முழுவதுமாகக் கீழ்ப்படியும் வரை! நீங்கள் அதற்கு முற்றிலும் கீழ்ப்படியும் வரை! அவனிடத்தில் இருந்த ஒரு நல்ல மனிதன் கரையில் நின்று கொண்டு, "தீர்க்கதரிசியோ, தகப்பனே, 'ஏழு தரம்' என்றான். பார்த்தீர்களா? தொடர்ந்து மூழ்கிக் கொண்டேயிருங்கள்" என்றான்.

159 அதுதான். நீங்கள் அதை முதல் இரவு புரிந்து கொள்ளவில்லை, அடுத்த இரவு மீண்டும் முழுகுங்கள். நீங்கள் அதைப் பெற்றுக்கொள்ளும் வரை அப்படியே தொடர்ந்து செய்து கொண்டேயிருங்கள்.

160 இப்பொழுது நினைவிருக்கட்டும். அவள், இந்தச் சிறிய ஸ்திரீ ராகாப் என்ற வேசியைப் போன்றிருந்தாள். அவள் ஒருபோதும் ஒரு அற்புதத்தையும் கண்டதில்லை. அவள் ஒரு அற்புதத்தைக் குறித்து மாத்திரமே கேள்விப்பட்டிருந்தாள். நியாயத்தீர்ப்பின் நாளிலே...அவள் நமக்கு என்ன செய்யப் போகிறாள்? அவள் ஒருபோதும் ஒரு அற்புதத்தையும் கண்டதில்லை. அவள் ஒரு புறஜாதியாயிருந்தாள். அவள் ஒருபோதும் கண்டதில்லை, ஆனால்

அவள் கேள்விப்பட்டிருந்தாள். நாம் பார்த்தும் கேட்டும் இன்னும் சந்தேகப்படுகிறோம். ஓ, என்னே!

161 அவள் ராகாப் வேசியைப் போல் இருந்தாள். வேவுகாரர்கள் அங்கு வந்தபோது, அவள், "நான் உங்களுக்குக் கூறுவேன். நீங்கள் யோசுவாவை அழைத்துக்கொண்டு, அவர் எனக்காக ஒரு ஆராதனை நடத்தட்டும், அப்பொழுது அவர் தன்னுடைய தலைமுடியை சீர்படுத்தும் விதத்தையும், அவர் பேசும் விதமும், பிரசங்க பீடத்தில் அவர் உபயோகிக்கும் ஆசார முறைகளையும் நான் காண்பேன். பிறகு நான் அவரை ஏற்றுக் கொள்ளலாமா வேண்டாமா என்று பார்ப்பேன்" என்று அவள் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கவில்லை. அதற்கு அவள், "பரலோகத்தின் தேவன் உங்களோடிருந்தார் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன், நான் கேட்கிற ஒரே காரியம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதே" என்றாள். அங்குதான் காரியம்.

162 அந்தச் சிறிய ஸ்திரீ உண்மையாகவே விடாமுயற்சியுடன் இருந்தாள். அவள் அப்படியே பிடித்துக் கொண்டாள். "என்னைக் காப்பாற்றுங்கள். நீர் என்னைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிற எந்தக் காரியத்தையும் நான் செய்வேன்" என்றாள். ஓ, அங்குதான் காரியமே உள்ளது. அதுதான்.

163 இந்தச் சிறிய ஸ்திரீ, என்ன கஷ்டமாயிருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல, அவள் விடாமுயற்சியுடன் இருந்தாள். ஓ! அவள் தேவனுடைய வரத்தைச் சரியான முறையில் அணுகினாள். அவளுக்குச் சரியான அணுகுமுறை, தாழ்மை இருந்தது. அவள் அவருடைய பாதத்தில் விழுந்து, அவள் தாழ்மையை உடையவளாயிருந்தாள். அவள் எழும்பி நின்று, "இப்பொழுது, நீர் ஒரு நிமிடம் பொறும். ஜனங்களாகிய நாங்கள் கிரேக்கர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். நாங்கள் நாய்களாயிருந்தோம் என்று நீர் கூறுகிறீர். இங்கே ஒரு நிமிடம், ஐயா. நாங்கள்— நாங்கள் கலையின் வல்லுநர்கள், மேலும் *இன்ன-இன்ன* மற்றும் *இன்னின்னவற்றின்* வல்லுநர்களும் நாங்கள்தான் என்பதை நீர் உணரவில்லையா?" என்று கூறவில்லை. அவள் அதைக் குறித்து ஒருபோதும் நினைக்கவேயில்லை. அவர் சரியாயிருந்தார் என்று அவள் ஒப்புக்கொண்டு, அவருடைய பாதத்தில் விழுந்து, "கர்த்தாவே, எனக்கு உதவி செய்யும். நான் துணிக்கைகளையே சாப்பிடுவேன். என் மகளுக்கு ஒரு துண்டு ரொட்டியை கூட வாங்கிக் கொடுக்க முடியவில்லையென்றால், அவள் ஒரு நாயாயிருந்தால், அவள் துணிக்கைகளைச் சாப்பிட அனுமதிப்பீரா?" என்று கேட்டாள். ஓ, என்னே! அங்குதான் காரியம்.

164 இன்று இரவு பரிசுத்த ஆவியானவர் ஒருவரிடம், "நீங்கள் குணமடைந்துவிட்டீர்கள்" என்று வெளிப்படுத்தினால், கிடைக்கும் சிறு துணிக்கைகளைக் கொண்டு நாம் திருப்தி அடைவோமா? துணிக்கைகளை அப்படியே எடுத்துக்கொள்ளத் தயாராக

இருப்பீர்களா, அல்லது தேவன் வந்து உங்களை எழுப்பி, உங்களுக்கு ஒருவிதமான உணர்வைத் தர வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா? அவர் உங்களுடைய இருதயத்தில், "என்னுடைய சுகவீனம் முடிந்துவிட்டது. நீ அதை இனிமேல் பெற்றிருக்கமாட்டாய். இன்றிரவு முதற்கொண்டு நான் சுகமடையப் போகிறேன் என்று நான் விசுவாசிக்கிறேன்" என்று மட்டும் சொன்னால், அந்தச் சிறு துணிக்கைகளை ஏற்றுக்கொள்வீர்களா? இல்லையென்றால், ஒவ்வொருவரும் வந்து உங்கள்மீது கரங்களை வைத்து, எண்ணெயை ஊற்றி, அது போன்ற வழக்கமான சடங்காச்சாரத்தினூடாகச் சென்று, இல்லையென்றால் நீங்கள் துணிக்கைகளைத் தேடிக்கொண்டிருக்கிறீர்களா? தேவன் அதைக் கனப்படுத்துவார்.

165 அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அநேக சீஷர்கள் அவரைக் கண்டிருந்தனர் என்பதை நீங்கள் அறிவீர்கள். தோமா, "இல்லை, ஹூ-ஹூ, நான் அதை நம்பமாட்டேன். நான்—நான் என்னுடைய கரங்களை அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான அந்தக் காயத்திலேயும், அவருடைய விலாவிலேயும் போட்டுப் பார்ப்பேன். அப்பொழுதே நான் அதை விசுவாசிப்பேன்" என்றான்.

166 அவர், "தோமாவே, இங்கே வா" என்றார். "என்னைத் தொட்டுப் பார்" என்றார். அவன் தொட்டுப் பார்த்தான்.

அவன், "என் ஆண்டவரே, என் தேவனே" என்றான்.

167 அவர், "தோமாவே, ஏனென்றால் நீ கண்டிருக்கிறாய், உணர்ந்திருக்கிறாய், மற்றும் ஒவ்வொரு காரியத்தையும், நீ விசுவாசிக்கிறாய்" என்றார்.

"ஆம், ஆண்டவரே."

168 அவர், "ஒருபோதும் அவரைக் காணாதிருந்தும், அவரை விசுவாசிப்பவர்களுக்கு அவர்களுடைய பலன் எவ்வளவு பெரியதாயிருக்கிறது!" என்றார்.

169 நாம் ஆயத்தமாயிருக்கிறோமா? நாம் புறஜாதி ஸ்திரீயைப் போன்ற புறஜாதியாரா? "கர்த்தாவே, துணிக்கைகளை மட்டும் எனக்குக் கொடுங்கள்" என்பதற்கு அவள் நம் எல்லோருக்கும் ஒரு மாதிரியாயிருந்தாளா? யாரோ ஒருவர், "நான் ஒருபோதும் வார்த்தையை வாசித்ததில்லை, ஆனால் நீர் வியாதியஸ்தரை சுகப்படுத்துகிறீர் என்று என்னிடம் கூறுங்கள். அந்தச் சிறு துணிக்கை எனக்குப் போதுமானதாக இருக்கும். நான் அதை விசுவாசிக்கிறேன். யாரோ ஒருவர் கூறுவதை நான் கேட்டு, அதை வார்த்தையிலிருந்து வாசிக்கட்டும், அதாவது பரிசுத்த ஆவியானவர்..." என்று கூறுவதை நான் கேட்கட்டும்.

170 பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு, "நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின்

நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது" என்றான்.

171 "கர்த்தாவே, அது சரியென்று நான் உணருகிறேன்." அது ஒரு சிறு துணிக்கை. வாருங்கள். நீங்கள் செய்ய வேண்டியது அவ்வளவுதான். வாருங்கள்.

172 நாம் துணிக்கைகளை எடுக்க ஆயத்தமாயிருக்கிறோமா? நாம் நம்மைத் தாழ்த்த ஆயத்தமாயிருக்கிறோமா? அவள் இருந்தாள். அவள் தன்னைத்தானே தாழ்த்த ஆயத்தமாயிருந்தாள். விசுவாசம் எப்பொழுதுமே வார்த்தையைச் சரியாக ஒத்துக்கொள்கிறது. விசுவாசம் எப்பொழுதுமே தாழ்மையாய் இருக்கிறது. விசுவாசம் தன்னைத்தானே தாழ்த்துகிறது. இப்பொழுது, அவள் துணிக்கைளைத் தேடிக்கொண்டிருந்தாள்.

173 இயேசு என்ன கூறினார் என்பதைக் கவனியுங்கள். "இந்த வார்த்தையின் நிமித்தம், 'ஆண்டவரே, சிறு துணிக்கைளை எடுத்துக்கொள்ள நான் விருப்பமாக இருக்கிறேன்' என்ற இந்த வார்த்தையின் நிமித்தம். இந்த வார்த்தையின் நிமித்தமாக உன்னுடைய பிள்ளை சொஸ்தமாயிருக்கிறாள். நீ அதை விசுவாசித்ததால், உன் வேண்டுகோள் நிறைவேறியுள்ளது."

174 விசுவாசமானது தேவனுடைய வார்த்தை சரியானது என்பதை ஒப்புக்கொள்கிறது. விசுவாசம் இந்த எல்லாக் காரியங்களையும் ஒத்துக்கொள்கிறது.

175 மார்த்தாள், மரியாள்; வேதாகமத்தினூடாக நாம் அநேகரை சொல்ல முடியும்; சூனேமிய ஸ்திரீ. நாம் அழைக்கக்கூடிய பல விஷயங்களும் நிகழ்வுகளும் உள்ளன. நமக்கு அதற்கெல்லாம் நேரமில்லை. இதில், துணிக்கைகளுக்காக அணுகிய மக்களைப் பற்றி எழுதப்பட்ட சுமார் ஐந்து பக்கங்கள் என்னிடம் இங்கே உள்ளன. ஆனால் நாம் ஒரு நிமிடம் அதைக் கடந்து செல்வோமாக. பரிசுத்த ஆவியானவர் அருகாமையில் இருப்பதை நான் உணருகிறேன். அது அவசியமில்லை என்று நான் நினைக்கிறேன்.

176 நான் உங்களுக்கு ஒரு சிறு அனுபவத்தைக் கொடுக்கட்டும். வர்த்தக புருஷர்கள் அங்குள்ள ஒரு சிறு காரியத்தைக் குறித்து, அண்மையில் ஒரு சிறு கட்டுரையைத் தங்களுடைய பத்திரிக்கையில் எழுதினர். நீங்கள் ஒரு அச்சிடப்பட்ட காரியத்தை உருவாக்கும்போது, அதை நீங்கள் ஆதரிப்பது மேலானதாயிருக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். மருத்துவரிடமிருந்து ஆவணப்படுத்தப்பட்ட அறிக்கையை நாங்கள் பெற்றுள்ளோம். இன்றிரவு சபையில், ஒரு சில ஸ்பானிஷ் ஜனங்களை நான் கவனிக்கிறேன்.

177 நான் மெக்சிகோ நகரத்தில் இருந்தேன், நாங்கள் ஒரு மகிமையான கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்தோம். நான் கிட்டத்தட்ட மூன்று இரவுகள் அங்கே இருந்தேன். நான் மனானா என்று அழைத்த ஒரு மனிதன் இருந்தான். அவர் என்னை ஆறு மணிக்கு அழைத்து வர வேண்டியதாயிருந்தது, சுமார் ஒன்பது மணிக்கு என்னிடம் வருவான். அவன் மிகவும் மெதுவாக இருந்ததால், நான் எப்போதும் அவனை "நாளை" என்றுதான் சொல்வேன். புரிகிறதா? நான் பிரசங்கித்துக் கொண்டிருந்த இந்தப் பெரிய வளையத்திற்கு நாங்கள் வெளியே சென்றபோது, அவர்கள் என்னை ஒரு ஏணியில் ஏற்றி, அதன்பின்னர் என்னைக் கயிறுகளால் கட்டி மேடையின் மேல் இருந்து கீழே இறக்க வேண்டியிருந்தது.

178 அதற்கு முந்தின நாள் இரவு, கூட்டத்திற்கு வந்திருந்த ஒரு மெக்சிகோ மனிதர் அங்கிருந்தார். அந்த வயோதிக நபர், மழை பெய்து கொண்டிருந்தபோது, பார்வையற்றவராக மேடைக்கு வந்தார். அவர் வந்தார். நான் நோக்கிப் பார்த்தேன். நான் நல்ல காலணிகளை அணிந்து, ஒரு நல்ல மேலங்கியை அணிந்திருந்தேன். அந்த ஏழ்மையான வயோதிக மனிதன் வெறுங்காலோடு இருந்தார், அவருடைய கால்சட்டை யாவும் கிழிந்திருந்தது. என்னுடைய மொழிபெயர்ப்பாளர் யார் என்பதை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஜனங்களாகிய நீங்கள் அவரை அறிவீர்கள்; சகோதரன் எஸ்பினோசா, இங்கே கலிபோர்னியாவில் உள்ள சாக்ரமென்டோவில் உள்ள பெந்தேகோஸ்தே சகோதரன். அவர் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார். நாங்கள் ஏறக்குறைய இரண்டு இரவுகளில், கத்தோலிக்க மார்க்கத்திலிருந்து ஏறக்குறைய முப்பதாயிரம் அல்லது நாற்பதாயிரம் பேர் கிறிஸ்தவ மார்க்கத்திற்கும், பரிசுத்த ஆவிக்கும் மாறினார்கள் என்று நான் நினைக்கிறேன்.

179 இந்த வயோதிக பார்வையற்ற மனிதன் மேடைக்கு வந்தார். நீங்கள் ஜெபித்துக் கொண்டிருக்கிற ஜனங்களுக்காக நீங்கள் உணரவில்லையென்றால், அவர்களுக்காக ஜெபிக்க வேண்டிய அவசியமே இல்லை. அவர்களுடைய நிலைமையை நீங்கள் உணர வேண்டும். மேலும் நான், "என்னுடைய வயதான தந்தை உயிரோடிருந்திருந்தால், அவர் ஏறக்குறைய அந்த வயோதிக மனிதனைப் போன்ற வயதாயிருந்திருப்பார். இதோ அவர் இருக்கிறார். அவரிடம் காலணிகளே இல்லை" என்று நினைத்தேன். அவர் சட்டையே அணிந்திருக்கவில்லை. கிழிந்த தூசி படிந்த ஒரு பழைய அங்கி; கயிறுகளால் தைக்கப்பட்ட ஒரு பழைய தொப்பி அவருடைய கையில் இருந்தது. அநேகமாக அந்த வயோதிக நபர் தன்னுடைய ஜீவியத்தில் ஒரு திருப்தியான ஆகாரத்தை சாப்பிட்டிருக்க மாட்டார். அதன்பின்னர் நிலைமையோ அவருக்கு எவ்வளவு கொடூரமானதாயிருந்தபோதிலும், இங்கே அவர் குருட்டுத்தன்மையினால் தள்ளாடிக் கொண்டிருக்கிறார். அவருடைய

கண்கள் வெண்மையாயிருந்தன.

180 நான் அந்த வயோதிக நபரைப் பார்த்து, நான்—நான் என்னுடைய கரங்களை அவரைச் சுற்றிப் போட்டுக் கொண்டேன். சகோதரன் எஸ்பினோசா அந்த ஜெபத்தை மொழிபெயர்க்கவில்லை. நான்—நான், "பரலோகப் பிதாவே, நான் என்னுடைய பாதரட்சையை அவருக்குக் கொடுக்க முடிந்தால், யாரும் பார்க்காதபடி அவற்றைக் கழற்றிவிட்டு, என் மேலங்கியையும் கொடுத்து, அவரை அனுப்பிவிடுவேன். ஆனால் அவர் என்னைவிட மிகவும் பெரியவர். ஆனால், தேவனே, அவர்மேல் இரக்கமாயிரும். அவருக்கு அவருடைய பார்வையைத் திரும்பக் கொடும்" என்றேன்.

181 அவர், "குளோரியா எ டியோஸ்" என்று கூச்சலிட்டார். நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். அவரால் என்னைப் போலவே நன்றாகப் பார்க்க முடிந்தது.

182 அடுத்த நாள் இரவு, இந்தக் கட்டிடத்தின் நீளத்திற்குச் சமமான, ஏறக்குறைய இந்த உயரமுள்ள ஒரு குவியலில், பழைய சால்வைகளும் பழைய கந்தல் துணிகளும் தவிர வேறு எதுவும் இருக்கவில்லை.

183 மெக்சிகோவின் பொருளாதாரம் சமநிலையற்றது. ஒருவேளை பெட்ரோ...அவர் ஒரு செங்கல் கொத்தனார், அவருக்கு ஒரு நாளைக்கு பதினாறு பெசோக்கள் கிடைக்கலாம். ஆனால் அவருக்கு ஒரு ஜோடி பாதரட்சை வாங்க நான்கு நாட்கள் வேலை செய்ய வேண்டும். ஆனால் தன் பாவங்களுக்காக ஒரு லட்சக்கணக்கான டாலர் மதிப்புள்ள தங்கப் பலிபீடத்தில் எரியூட்ட, ஒரு மசகு மெழுகுவர்த்தியை வாங்குவதற்குத் தேவையான பணத்தை, அதாவது பல பெசோக்களை, அவர் அதிலிருந்து சேமிக்க வேண்டியிருக்கும். அதுதான் எனக்குக் கொதிப்பை ஏற்படுத்துகிறது.

184 அந்த விலையேறப்பெற்ற ஜனங்களைக் காணும்போது, அவர்கள் காலை ஒன்பது மணிக்கு அங்கு வருகிறார்கள். உட்கார, இருக்கைகள் இல்லை. அவர்கள் மேய்ச்சலில் இருந்த ஆடுகளைப் போல ஒருவர் மீது ஒருவர் சாய்ந்திருந்தனர். மழை பெய்கிறது! அந்தப் பெண்கள் நிற்க, அவர்களுடைய கூந்தல் ஈரத்தில் வழிய, முழுவதும் நனைந்திருக்கிறார்கள், தேவனுடைய வார்த்தையைக் கேட்பதற்காக, நாள் முழுவதும் கடும் வெயிலிலோ அல்லது மழையிலோ காத்திருக்க வேண்டியதாயுள்ளது. ஓ, நியாயத்தீர்ப்பு நாளில் ஃபீனிக்ஸ் அவர்களுடன் எழும்போது அவர்கள் என்ன செய்வார்கள், எங்கும் சிறந்த சபைகள் இருக்கும்போது, அவர்களை உள்ளே கூட்டிச் சேர்க்கக் கூட முடியாதா?

அவள் அங்கே நின்றாள், இல்லை, சரியாகச் சொல்வதானால், அவர் தன் பார்வையுடன் நின்றார்.

185 அன்றிரவு நான் உள்ளே சென்றபோது, பலத்த மழை பெய்து கொண்டிருந்தது. சகோதரன் ஜேக் மூர், உங்களில்

அநேகருக்கு அவரைத் தெரியும், சகோதரன் எஸ்பினோசா, அநேக சகோதரர்கள் மேடையில் இருந்தனர். பில்லி, என் மகனே, அவன் வழக்கமாக ஜெப அட்டைகளைக் கொடுப்பான். அவனால் அந்த ஜனங்களிடத்தில் ஸ்பானிஷ் பாஷை பேச முடியவில்லை, எனவே அவன் மனானாவை அதைச் செய்ய அனுமதிக்க வேண்டியதாயிருந்தது. ஆனால் மனானா ஒரு ஜெப அட்டையையும் விற்கவில்லை என்பதைக் காண அவன் சுற்றிச் சென்று பார்த்தான். எனவே அங்குதான் நாம் ஜெப அட்டையை விற்பது குறித்து கவனிக்க வேண்டும். அதனால், அவன் அவரை வெறுமனே பார்த்துக்கொண்டிருந்தான், அவர்கள் நடந்து சென்று, அவன் அந்த ஜெப அட்டையை *இன்னார்-மற்றும்-இன்னார்* மற்றும் அதைப் போன்றவர்களிடத்தில் கொடுப்பதை கவனித்துப் பார்க்கின்றனர். எனவே அவன் கூறினார்...

186 என்னிடம் வந்து, நான் பிரசிங்கத்துக் கொண்டிருந்தேன். அங்கே பெரிய துணிகள் குவியலாகக் கிடந்தன. அவை யாரை சேர்ந்தவர்கள் என்பதை அவர்கள் எப்படி அறிந்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. எனவே அவர்கள்...நான் பேசிக் கொண்டிருந்தேன், அப்போது பில்லி என் தோளில் தட்டினான். அவன், "அப்பா, நீங்கள் ஏதோ ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும், அங்கே அந்தச் சிறிய பெண்மணி" என்றான். மேலும், "எனக்கு ஏறக்குறைய முன்னூறு வாயிற்காப்போர் உள்ளனர், அவர்களால் அவளைப் பிடித்து வைக்கக் கூட முடியவில்லை" என்றான். ஒரு சிறிய ஸ்பானிய பெண், ஏறக்குறைய *அவ்வளவு* உயரமான, அழகான சிறிய உருவம் கொண்டவள், அவள் ஒரு போர்வையின் கீழ், ஒரு மரித்த குழந்தையைத் தன்னுடைய கரங்களில் வைத்திருந்தாள். மேலும் அவன், "மனானா ஒவ்வொரு ஜெப அட்டையையும் கொடுத்து விட்டான்" என்றான். மேலும், "அவளிடம் ஜெப அட்டை இல்லை. அங்கே வரிசையில் நிற்கிறார்கள், அவர்கள் கடந்த இரண்டு மணி நேரமாக உங்களுக்காகக் காத்திருக்கிறார்கள், வாருங்கள். மேலும், "அவள் அந்த மரித்த குழந்தையை இங்கே கொண்டு வர விரும்புகிறாள், எங்களால் அவளைப் பிடித்து வைக்க முடியவில்லை" என்றான்.

187 ஓ, பாருங்கள், அவள் வாயிற்காப்போர்களின் மேலேறி வந்து, அவர்களுடைய காலடியில் ஓடினாள், அல்லது எதையும் செய்வாள். அவள் விடாப்பிடியாக இருந்தாள். அவள் அங்குச் செல்ல விரும்பினாள். அதற்கு முந்தின இரவு அந்தக் குருடன் சுகமாக்கப்பட்டதை அவள் கண்டிருந்தாள். அவள் விடாப்பிடியாக இருந்தாள்.

188 நான், "சகோதரன் மூர், நான் யாரென்று அவளுக்குத் தெரியாது. யார் யார் என்று கூட அவளுக்குத் தெரியாது. நீங்கள் அங்குச் சென்று குழந்தைக்காக ஜெபிக்க வேண்டும். அதுவே அதைத் தீர்த்து வைக்கும். அவள்..." என்றேன்.

அதற்கு அவர், “சரி, சகோதரன் பிரான்ஹாம்” என்றார்.

189 எனவே பில்லி அவரைக் கரம் பிடித்தான், அது என்னைப் போல இருக்கும், எனவே மேடையின் குறுக்கே கீழே சென்றான். நான் திரும்பினேன். நான், “இன்றிரவு நான் இங்கு இருப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்” என்றேன். இங்கே பீனிக்ஸில் உள்ள ஜனங்களாகிய உங்களுக்குக் கூட்டங்கள் விசித்திரமானவை அல்ல. எனக்கு முன்பாக இங்கே ஒரு தரிசனத்தில் ஒரு சிறு மெக்சிகன் குழந்தை, பற்கள் இல்லாமலும், சிரிப்பதையும் கண்டேன். நான், “ஒரு நிமிடம் பொறுங்கள். சகோதரன் எஸ்பினோசா, ஒரு நிமிடம் பொறுங்கள். அங்குச் செல்லுங்கள்...” என்றேன்.

“என்ன—என்ன காரியம்?” என்றார்.

190 நான், “ஒலிப்பெருக்கி யண்டை வாருங்கள்” என்றேன். நான், “அவளை இங்கு வரும்படி கூறுங்கள்” என்றேன்.

191 அதற்குப் பில்லி, “அப்பா,” என்று கூறி, “அவர்களுடைய ஜெப அட்டைகள் அனைத்தையும் தாண்டி நீங்கள் அவளைக் கொண்டு வர முடியாது” என்றான்.

நான், “அவளை இங்கே அழைத்து வா. நான் இப்பொழுதுதான் ஒரு தரிசனத்தைக் கண்டேன்” என்றேன்.

192 எனவே, அவன் அவளை அழைத்தான். அவர்கள் திரும்பி வருகிறார்கள். இதோ அவள் தன்னுடைய கையில் *இந்த* விதமான ஒரு மெத்தையுடன் வந்தாள். ஒரு சிறு குழந்தை அங்கே கிடத்தப்பட்டு, அன்று காலை முதலே மரித்திருந்தது, நுரையீரல் காய்ச்சலினால் மரித்துப்போய்விட்டது, *அந்த* அளவு நீளமுள்ள சிறுவன். இதோ அவள் வந்தாள், அவளுடைய கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது, அவளுடைய சிறிய கறுத்த கண்கள், அவளுடைய தலைமுடி கீழே தொங்கிக் கொண்டிருக்க, மிகவும் வசீகரமான சிறு பெண்மணி. அவள் மேடைக்கு ஓடி, முழங்காலில் விழுந்து, “பத்ரே!” என்று அழத் துவங்கினாள்.

நான், “ஒரு நிமிடம் எழுந்து நில்” என்றேன்.

193 நான், “கர்த்தாவே, அது இல்லையென்றால் என்ன செய்வது? அது அவ்வாறு இல்லையென்றால் என்னவாகும்? எனக்குத் தெரியாது. நான் ஒரு சிறு மெக்சிகன் குழந்தையை, அந்தச் சிறிய, பற்களே இல்லாமல், அவனுடைய சிறிய ஈறுகளைக் கண்டேன். அது *அங்கே* அமர்ந்து என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தது” என்று நினைத்தேன்.

194 அவள் அழுதுகொண்டிருந்தாள். நான் என்னுடைய கரத்தை அந்த ஈரமான போர்வையின் மேல் வைத்தேன், அப்பொழுது மழை பெய்து கொண்டிருந்தது. நான், “பரலோகப் பிதாவே, இந்தச் சிறிய ஸ்திரீக்கு நீர் பதில் அளித்துக்கொண்டிருக்கிறீர் என்பதைக் குறித்து என்னுடைய மனதில் எந்தச் சந்தேகமுமில்லை” என்றேன். நான், “நீர்

உண்மையென அறிந்திருக்கிற ஒரு சிறு குழந்தையின் தரிசனத்தை நான் கண்டேன். அது இந்தக் குழந்தை என்று விசுவாசத்தினால் மாத்திரமே நான் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறேன். எனக்கு அந்த ஸ்திரீயையோ அல்லது குழந்தையையோ எனக்குத் தெரியாது. ஆனால், ஏதோ ஒரு காரியம், நீர் இரு முனைகளிலும் கிரியை செய்கிறீர்" என்றேன். நான் என் கரங்களை அதன் மேல் வைத்தேன். நான் அதைச் செய்தபோது, அது உதைத்து, அவ்வளவு சத்தமாகக் கூச்சலிட்டது. அந்தத் தாய் அதிலிருந்து போர்வையை உதறித் தள்ளிவிட்டாள், அப்பொழுது அது அவளுடைய கரங்களில் உயிரோடு இருந்தது.

195 நான், "சகோதரன் எஸ்பினோசா அவர்களே, அதைக் குறித்துக் கொள்ள வேண்டாம், ஆனால் ஒரு நல்ல விசுவாசமுள்ள நபரை அனுப்புங்கள்" என்றேன். அவள் மெக்சிகோ பாஷையில் கூறிக்கொண்டிருந்தபோது, அவளுடைய குழந்தை நிமோனியா காய்ச்சலால் இறந்துவிட்டதாக மருத்துவர் அறிவித்தார், காலை எட்டு அல்லது ஒன்பது மணி இருக்கும். இதோ அன்றிரவு பத்து மணிக்கு மேல் ஆகிவிட்டது. மேலும் நான், "அது இறந்துவிட்டதாகக் கூறி, மருத்துவரிடமிருந்து ஒரு ஆவணப்படுத்தப்பட்ட அறிக்கையை எழுதி அனுப்புங்கள்" என்றேன்.

196 மெக்சிகோ மருத்துவர் ஒரு அறிக்கையை எழுதி அதில் கையொப்பமிட்டு, "இன்று காலை ஒன்பது மணிக்கு என்னுடைய அலுவலகத்தில் மூச்சுத்திணறல் இல்லை சுவாசம் இல்லை, அந்தக் குழந்தை மரித்துவிட்டதாக நான் அறிவித்தேன்." என்றார்.

197 இதோ அன்றிரவு பத்து மணி. அடுத்த நாள் காலை, "மீண்டும் இயல்பு நிலையில் உள்ளது," என்று பரிசோதிக்கப்படுவதற்காக மருத்துவர் அலுவலகத்தில் குழந்தை இருந்தது. ஏன்? ஏனென்றால் அந்தச் சிறிய ஸ்திரீ விடாமுயற்சியுள்ளவளாயிருந்தாள்.

198 விசுவாசம் தோல்வியை அறியாது. அங்கே ஐயாயிரம் பேர் நின்று கொண்டிருந்தால், அந்த இடத்தை எதுவுமே எடுத்துக்கொள்ள முடியாது. அவளுடைய சபை அவளைப் புறக்கணிக்க முடிந்தது, அவளுடைய அண்டை வீட்டார் சிரிக்க முடிந்தது. ஆனால் அதற்கு முந்தைய இரவு ஒரு மனிதனின் குருட்டுக் கண்களைத் திறக்கக்கூடிய ஒரு தேவன், அவளுடைய குழந்தையை உயிர்ப்பிக்க முடியும், ஏனென்றால் அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாத தேவனாயிருக்கிறார்.

199 இன்றிரவு இங்குள்ள இந்தக் கூட்ட ஜனங்கள், துணிக்கையை ஆராய்ந்து பார்ப்பவர்களாயிருந்தால், நீங்கள் அவ்வாறு இருந்தால்; உங்களை இங்கே கொண்டு வந்த அதே தேவன், அது உங்களை இப்படிப்பட்ட ஒரு இடத்திற்கு வழி நடத்திச் செல்லக்கூடும், உங்களை இரட்சித்த தேவன், உங்களைப் பரிசுத்த ஆவியினால் நிரப்ப முடிந்த தேவன்; அதே தேவனால் சுகவீனத்தையும்,

துக்கத்தையும் முழுவதுமாகத் துடைத்தொழிக்க முடியும், இன்றிரவு உங்களுடைய இருதயங்களில் அது என்னவாயிருந்தாலும், நீங்கள் அதை விசுவாசித்தால். விடாமுயற்சியோடு, விடாப்பிடியோடு, இப்பொழுது அந்தத் துணிக்கையின் விசுவாசத்தை பற்றிக்கொண்டு, "கர்த்தாவே, அதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். இதோ நான் வருகிறேன்" என்பீர்கள்.

அண்டை வீட்டாரோ நாளை, "நீ சுகமடையவில்லை" என்று கூறுவார்.

200 "ஓ, ஆனால் நான் அப்படித்தான். நான் அப்படித்தான் இருக்கிறேன். நான் நேற்றிரவு ஃபோர்ஸ்கொயர் சபையில் ஒரு சிறு துணிக்கை ஒன்றைக் கண்டேன். ஏதோ ஒன்று எனக்குள்ளாக நங்கூரமிட்டுள்ளது. இனிமேல் எதுவுமே என்னைத் தடுத்து நிறுத்தப் போவதில்லை. நான் அதைப் பெற்றிருக்கிறேன்" என்று கூறுங்கள்.

நாம் நம்முடைய தலைகளை அப்படியே ஒரு நிமிடம் வணங்குவோமாக.

201 இன்றிரவு உங்களுக்கு ஒரு துணிக்கை தேவையா? நீங்கள் சிறு துணிக்கையை எடுத்து, அதனோடு விடாமுயற்சியுடன் இருக்க முடியுமா?

202 ஒரு—ஒரு சிறு புறஜாதி கிரேக்க ஸ்திரீயினிடத்தில் உண்டான சிறு துணிக்கையின் விசுவாசம், அவளுடைய ஜீவியத்தில் ஒருபோதும் ஒரு அற்புதத்தையும் காணவேயில்லை, ஒரு அஞ்ஞான விக்கிரகாராதனைக்காரர், ஆனால் அது வேறொருவர் மேல் கிரியை செய்யப்பட்டிருந்தது என்று அவள் கேள்விப்பட்டாள். அவள் அதை ஒருபோதும் கண்டதில்லை, ஆனால் அவள் அதை விசுவாசித்தாள். அவளுக்கு இருந்த எல்லா ஏமாற்றங்களும், அதே சமயத்தில் அவளுடைய பிள்ளை சுகமாக்கப்பட முடியும் என்று அவளுடைய இருதயத்தில் கூறின ஏதோ ஒரு காரியத்தின் அடிப்படையின் பேரில், அவள் வீட்டிற்கு வந்தபோது, அவளுடைய மகள் ஒரு படுக்கையில் படுத்துக் கொண்டிருப்பதை அவள் கண்டாள் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவளிடத்திலிருந்து அந்தப் பிசாசின் வல்லமை போய்விட்டிருந்தது. தனக்காக மாத்திரமல்ல, ஆனால் பிரசன்னமாயிராத அவளுடைய மகளுக்காகவும்.

203 இன்றிரவு உங்களுக்கு ஒரு சிறு துணிக்கை தேவையா? நீங்கள் அவ்வாறு செய்தால், நீங்கள் உங்களுடைய கரத்தை உயர்த்துவீர்கள். மேலும், "கர்த்தாவே, நான் கேட்பதெல்லாம் ஒரு சிறு துணிக்கை மாத்திரமே" என்று கூறுங்கள்.

204 ஓ, பரலோகப் பிதாவே, துணிக்கைகளைத் தேடும் புறஜாதியாரை நோக்கிப் பாரும். கர்த்தாவே, காலங்கள் இன்னமும் மாறவில்லை. அவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். நீர் வியாதியஸ்தரை சுகப்படுத்துகிறீர் என்று அவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். நீர் பரிசுத்த ஆவியினால் நிரப்புகிறீர் என்று அவர்கள்

கேள்விப்பட்டிருக்கிறார்கள். சோர்ந்துபோயிருக்கிறவர்களுக்கு நீர் இளைப்பாறுதலைத் தருகிறீர். ஓ, தேவனே, அநேக நாட்களுக்கு முன்பிருந்த அந்த விலையேறப்பெற்ற சிறு பெண்மணியைப் போல இவர்கள் அங்கே இன்றிரவு கதறிக் கொண்டிருக்க, "கர்த்தாவே, நாங்கள் உம்முடைய ஜனங்களைப் போல ஆசீர்வாதங்களைப் பெற உண்மையாகவே பாத்திரர்களல்ல, இஸ்ரவேலரோ, ஆனால் நாங்கள் போதகரின் மேசையிலிருந்து விழும் ஒரு சிறு துணிக்கையை மாத்திரமே தேடுகிறோம்."

205 இன்றிரவு உம்முடைய சபையை நீர் போஷித்திருக்கிற அந்த மகத்தான ஆகாரத்தை நாங்கள் காண்பித்திருக்கிறோம். இன்றிரவு நாங்கள் துணிக்கைகளை மாத்திரமல்ல, ஆனால் நாங்கள் மேஜைக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். நாங்கள் உண்மையாகவே துணிக்கைகளை எடுக்க வேண்டியதில்லை, ஆனால் அவைகளைப் பெற்றுக்கொள்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ஆனால் இன்றிரவு நாங்கள் மேஜைக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். "தேவனுடைய பரிசுத்தவான்கள் யாவரும் போஷிக்கப்படுகிற இடத்தில் இயேசு தம்முடைய மேசையை விரித்திருக்கிறார். அவர் தம்முடைய தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களை வந்து புசிக்கும்படி அழைக்கிறார்." பிதாவே, இன்றிரவே, ஒரு தேவையை உடையவர்களாயிருக்கிற ஒவ்வொருவருக்கும், அந்தத் தேவை சந்திக்கப்படும்படி அருளும்.

206 நாம் நம்முடைய தலைகளை வணங்கியிருக்கையில், நம்முடைய இருதயங்கள் தேவனுக்கு முன்பாகத் தாழ்மையாய் வணங்கியிருக்கையில், இன்றிரவு இந்தக் கட்டிடத்தில் எத்தனை பேர் இரட்சிக்கப்படாமல், இயேசுவானவர் வந்து உலகம் இன்றிரவில் அதன் முடிவைச் சந்திக்குமானால், நீங்கள், நீங்கள் உங்களுடைய இருதயத்தில் வைக்கப்பட்டுள்ள சிறு துணிக்கை விசுவாசத்தை எடுத்து, இன்றிரவு மேஜையண்டை வந்து, உங்களுடைய சிறு துண்டு விசுவாசத்தை தேவனுக்கு முன்பாகச் சமர்ப்பித்து, அவ்வாறு செய்ய விரும்புகிறவர்கள், நீங்கள் எழுந்து நின்று, இறங்கி வந்து, நாங்கள் இங்கே பீடத்தண்டையில் உங்களுக்காக நாங்கள் ஜெபிக்க அனுமதிப்பீர்களா என்று நான் எதிர்பார்க்கிறேன்?

207 நீங்கள் தாமதிக்காமல் அப்படியே வருவீர்களா? அப்படியே கீழே நடந்து செல்லுங்கள். என் சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. வேறு யாராவது வருவார்களா? என் சகோதரியே, கர்த்தர் உங்களோடு இருப்பாராக. நீங்கள் இங்கே வாருங்கள். சிறு துணிக்கைகளை விரும்புகிற வேறு எவரேனும் இருக்கிறீர்களா, கர்த்தருடைய மேஜையண்டை வருவீர்களா? "கர்த்தாவே, நான் வருவதற்கு பாத்திரன் அல்ல. நான்—நான்...நான் ஒரு நாய். நான்... அந்த ஸ்திரீயைப் பார்க்கிலும் நான் எந்தத் தகுதியுடையவனும் இல்லை, ஆனால் நான் சிறு துணிக்கைகளுக்காகவே வருகிறேன்" என்று கூறுங்கள். பாவியான நண்பனே, நீ வருவாயா? வாருங்கள்.

இது உங்களுடைய கடைசி நேரமாயிருக்கலாம்.

208 இன்றைக்கு உலகம் எப்படியுள்ளது என்பதை நீங்கள் பார்த்தீர்களா? ஜனங்கள் இனி வர விரும்புவதில்லை. உங்களால் அவர்களைச் சம்மதிக்க வைக்க முடியாது. சுவிசேஷம், அது வெளி ஊழிய களங்களுக்குச் செல்வது போன்று காணப்படுகிறது.

209 என்னுடைய நல்ல சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அது அற்புதமானது. அப்படியே ஒரு நிமிடம் இங்கே நில்லுங்கள்.

210 வேறு யாராகிலும் ஒருவர் இங்கே பக்கவாட்டில், "நான் இந்த மனிதனோடு நிற்கிறேன்" என்று கூறுகிறார். மகனே, கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அது உண்மை. கீழே இறங்கி வந்து, "கர்த்தாவே, எனக்கு ஒரு சிறு துணிக்கை வேண்டும். ஒரு சிறு துணிக்கை எனக்குச் சரியானதுதான். ஏதோ ஒன்று என் இருதயத்தைத் தொட்டது. இப்பொழுது நான் வந்து கொண்டிருக்கிறேன்" என்று கூறுங்கள். மகனே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. என் சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. இங்கேயே நில்.

211 உங்களுடைய இருதயத்தின் ஒரு விசுவாச துணுக்கை வேறு யாரேனும் உணர்ந்தால், அது இப்பொழுது மேஜைக்கு வரும்படி உங்களைக் கவர்ந்திழுக்கும். இங்கே நின்று கொண்டு காத்துக் கொண்டிருக்கிற இந்த நான்கு வாலிபர்களோடு நீங்கள் வருவீர்களா? நான் இன்றிரவு ஒரு ஸ்திரீயைக் குறித்து பிரசங்கித்தேன், ஆனால் வருவது ஆண்கள்தான். சகோதரியே, அதைக் குறித்து என்ன? நீங்களும் கூட, துணிக்கைக்காக வரமாட்டீர்களா? நீங்கள் தவறாக இருக்கிறீர்கள் என்று உங்களிடம் கூறுகிற அந்தச் சிறிதளவு விசுவாசத்தை நீங்கள் பெற்றுள்ளீர்களா?

"சகோதரன் பிரான்ஹாம் அவர்களே, ஒரு சிறு துணிக்கை என்றால் என்னவென்று எனக்குத் தெரியாது" என்று கூறலாம்.

212 இப்பொழுது உங்களுடைய இருதயத்தில் உள்ள சிறு துணிக்கை மாத்திரமே நீங்கள் தவறாக இருக்கிறீர்கள் என்று கூறுகிறது. நீங்கள் மனந்திரும்ப வேண்டும். வாருங்கள், நீங்கள் வரமாட்டீர்களா? இரத்தத்தினால் நிறைந்த ஊற்றண்டை இனிமையாக, துரிதமாக வாருங்கள். நீங்கள் அங்கிருந்து நகரமாட்டீர்களா? "சகோதரனே, நான் தவறாயிருக்கிறேன். எனக்காக ஜெபியுங்கள்." கீழே வாருங்கள். சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

213 வேறுயாராவது? "கர்த்தாவே, எனக்கு ஒரு சிறு துணிக்கை மாத்திரமே வேண்டும். என்னுடைய இருதயத்தில் உள்ள இந்தச் சிறு துணிக்கையை, நான் அதை அளிக்க இப்பொழுது வருகிறேன்." நீங்கள் வருவீர்களா?

214 இப்பொழுது இங்கே பின்வாங்கிப்போய், விட்டுச் சென்ற எவரேனும், நீங்கள் வர விரும்பினால், நீங்கள் இப்பொழுதே வருவீர்களா?

215 பரிசுத்த ஆவி இல்லாத சிலர், நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கவில்லையா? ஓ, நண்பனே, இந்தக் கடைசி நாளில் இந்த வெளிச்சம் உங்களுக்கு மிகவும் உண்மையாயிருந்தால், நீங்களும் கூட நிற்க மாட்டீர்களா? உங்கள் இருதயத்தில் இருக்கும் அந்தப் பெரிய வாஞ்சை, ஏதோ ஒன்று உங்களிடம் சொல்லிக்கொண்டிருப்பது, நிறைவேறும் நேரமாக இது இருக்கலாம், "இன்றிரவு கர்த்தர் எனக்கு ஆவியின் அபிஷேகத்தைக் கொடுக்கப் போகிறார் என்று நான் விசுவாசிக்கிறேன். நான் வந்து நிற்க விரும்புகிறேன்" என்று உங்களிடத்தில் சொல்லுகிறது. பீடத்தைச் சுற்றி வாருங்கள். நீங்கள் அதைச் செய்வீர்களா? "எனக்குப் பரிசுத்த ஆவி தேவை" என்ற சிறு துணிக்கையை உணருகிற நீங்கள் எங்களோடு ஜெபத்திற்காக நில்லுங்கள். ஒஹையோவிலிருந்து ஒரு மனிதனால் இங்கே ஒரு ஜெட் விமானத்தில் பறந்து வர முடிந்தால். சகோதரர் கிராண்ட், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஒரு பிரஸ்பிடேரியன் இங்கே ஒஹையோவிலிருந்து ஒரு ஜெட் விமானத்தில் பறந்து வந்து பலிபீடத்தில் நிற்க முடியும், ஆனால் ஃபீனிக்ஸில் உள்ளவர்களைப் பற்றி என்ன?

216 என் சகோதரியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சற்று நேரம் இங்கே நில்லுங்கள். நீங்கள் வரமாட்டீர்களா?

இம்மானுவேலின் நரம்புகளிலிருந்து
எடுக்கப்பட்டது,

217 இன்றிரவு ஊற்று திறந்திருக்கிற இடத்திற்கு தேவனுடைய நன்மையான காரியங்களால் நிரப்பப்பட நீங்கள் வரமாட்டீர்களா? நாம் சற்று நேரம் காத்திருப்போமேயானால், நிச்சயமாகவே இங்குள்ள அதைக் காட்டிலும் அதிகமானவர்கள், அதாவது துணிக்கைகளை எடுத்துக்கொள்ள விருப்பமுள்ளவர்களாயிருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். நிச்சயமாக இருக்க வேண்டும். நீங்கள் வரமாட்டீர்களா? நான் உங்களிடம் கேட்டுக் கொண்டிருக்கிறபடியே ஒரு முறை செய்யுங்கள். அதை உங்களுடைய இருதயத்தில் உத்தமமாக ஏற்றுக்கொண்டு, "நான் வருகிறேன். இதுவே நான் வருவதற்கான நேரம். நான் எப்படியும் வருகிறேன்" என்று கூறுங்கள். சகோதரிகளே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அது மிகவும் நல்லது. இப்பொழுது நீங்கள் வருவதற்காக நாங்கள் பொறுமையாகக் காத்துக் கொண்டிருக்கிறோம்.

218 நாம் காத்திருக்கையில் இப்பொழுது நம்முடைய தலைகளை வணங்கி, இந்தச் சபையின் பாடலைப் பாடுவோம்.

இரத்தத்தினால் நிறைந்த ஒரு ஊற்று உண்டு,

இம்மானுவேலினுடைய...

219 இப்பொழுது நீங்கள் வரமாட்டீர்களா? நீங்கள் உங்களுடைய சிறு துணிக்கையை எடுத்துக்கொண்டு வரமாட்டீர்களா?

...அந்த வெள்ளத்தின் கீழே

நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற விரும்பினால், நீங்கள் இப்பொழுது உள்ளே வரமாட்டீர்களா?

தங்களுடைய எல்லா குற்றக் கறையையும்
போக்கிக்கொள்ள,
தங்களுடைய எல்லா குற்றக் கறையையும்
போக்குகின்றனர்;
பாவிகள் கீழே மூழ்கினர்...

நண்பரே, வாருங்கள்.

எல்லாவற்றையும் இழந்து...
மரித்துக்கொண்டிருந்த கள்ளன் அதைக்
கண்டு களிகூர்ந்தான் (...?...சரியாக இங்கே
பீடத்தண்டையில். நீங்கள்...?...)

...அவன் இழிவானவனாயிருந்தாலும்,
அவர்களுடைய எல்லா பாவங்களையும் கழுவி...

என் சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அந்தவிதமாகத்தான் அதைச் செய்ய வேண்டும்.

220 இப்பொழுது இங்குள்ள ஊழியக்காரர்கள் இங்கே நம்மோடு எழும்பி நிற்பார்களா என்று நான் எதிர்பார்க்கிறேன். இந்தக் கட்டிடத்தில் உள்ள ஊழியக்காரர்களே, இப்பொழுது ஒரு நிமிடம் இங்கே வந்து இங்கே எங்களோடு நில்லுங்கள், போதகர்கள்—அவர்கள் இழக்கப்பட்ட ஆத்துமாக்களின் பேரில் அக்கறை கொண்டுள்ளனர்.

...நான் அவனைப் போல
இழிவானவனாயிருந்தாலும்,
என்னுடைய எல்லா பாவங்களையும் கழுவும்.

221 வார்த்தையின் பேரில் போதகர்கள் வர விரும்புகிற போதகர்கள் இங்கே இருக்கிறார்களா என்று நான் எதிர்பார்க்கிறேன். நித்திய இலக்குகள் இப்பொழுதே தீர்மானிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை நினைவில் கொள்ளுங்கள். இங்கே ஏறக்குறைய ஏழு அல்லது எட்டு, பத்து பேர் நின்று கொண்டிருக்கிறார்கள். அதன் அர்த்தம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? ஒரு ஆத்துமா பத்தாயிரம் உலகங்களுக்கு மதிப்புள்ளது. நாம் இதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

222 இப்பொழுது, சுகவீனமாயிருக்கிற, உங்களுக்காக விசுவாசமுள்ள ஜெபத்தை ஜெபிக்கப்பட விரும்புகிற

நீங்கள், சுகவீனமாயும், தேவையாயுமிருக்கிற நீங்கள் எங்கே இருக்கிறீர்களோ அங்கேயே நீங்கள் நிற்பீர்களா. அது நல்லது.

223 இப்பொழுது, என்னுடைய ஊழியக்கார சகோதரர்களே, அது உண்மை, இந்த ஜனங்கள்மீது உங்களுடைய கரங்களை வையுங்கள்.

224 இப்பொழுது, சுகவீனமான ஜனங்களே, நீங்கள் உங்களுடைய கரங்களை ஒருவர் மீது ஒருவர் வைக்கும்படியாக, ஒருவிதமாக நெருங்கி நில்லுங்கள். இப்பொழுது, வேதம் சுகவீனராகிய உங்களிடம், "விசுவாசிக்கிறவர்களை இந்த அடையாளங்கள் பின்தொடரும்" என்று கூறியுள்ளது. நீங்கள் ஒரு விசுவாசியாயிருக்க வேண்டும், இல்லையென்றால் நீங்கள் நின்று கொண்டிருக்க மாட்டீர்கள். "அவர்கள் வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்." அது உண்மை என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த வேத வாக்கியங்கள் தவறிப்போக முடியாது.

225 பீடத்தண்டை வரும் இந்த மனந்திரும்புகிறவர்களுக்கும், இன்றிரவு பீடத்தண்டை வரும் என்னுடைய சகோதர சகோதரிகளுக்கும், நீங்கள் எப்போதாவது தேவனை சந்திக்க வேண்டும் என்பதை அறிந்திருக்கிற அழிவுள்ள மானிடர்கள். சிலருடைய பாவங்கள் அவர்களுக்கு முன்பாகச் செல்கின்றன, சில பின் தொடர்கின்றன என்று வேதம் உரைத்துள்ளது. உங்களுடைய பாவங்கள் உங்களுக்கு முன்பாகச் செல்லும் என்றும், கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினூடாக அவைகள் மன்னிக்கப்படும் என்றும், இன்றிரவு உங்களுடைய பாவங்களை நீங்கள் அறிக்கை செய்து கொண்டிருக்கிறீர்கள்.

226 இங்கே நீங்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை நாடிக்கொண்டிருக்கையில், அப்போஸ்தலர் 10-ம் அதிகாரத்தில் தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளார். "இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில், அதைக் கேட்டவர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்" என்று நாம் வாசிக்கிறோம். அவர்கள் மிகவும் பசியாயிருந்தனர்! இப்பொழுது, நீங்கள் பசியாயிருக்கிறீர்கள். நீங்கள் அந்தச் சிறு துணிக்கையை இங்கே கொண்டு வந்தீர்கள். இப்பொழுது நாம் தேவனுடைய ஆசீர்வாதங்களைக் கொண்ட ஒரு உண்மையான முழு ஆகாரத்தை எடுத்துக் கொள்வோம். இவையாவும் உங்களுக்கானதாயுள்ளது.

227 இப்பொழுது, ஜெபத்தில் விசுவாசமுள்ள ஜனங்களாகிய நீங்கள், நாம் ஒன்று சேர்ந்து நம்முடைய தலைகளை வணங்கி, இப்பொழுது ஜெபித்து, விசுவாசிப்போமாக. இப்பொழுது, உங்களைச் சுற்றிலும் யார் இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடுங்கள். இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு யாரும் உங்களைச் சுற்றிலும் இல்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள். ஒவ்வொருவரும் நீங்கள் ஜெபிக்கும் விதமாகவே ஜெபிக்க வேண்டும், நீங்கள் வழக்கமாக

ஜெபித்தவிதமாகவே ஜெபிக்க வேண்டும். சகோதரர்களே, உங்கள் கரங்களை இந்த ஜனங்கள்மேல் வைத்து, இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் வந்து, நாம் கேட்டுக்கொண்டிருக்கிற இந்தக் காரியங்களை நிறைவேற்றப் போகிறார் என்று விசுவாசிப்போமாக.

228 எங்கள் பரலோகப் பிதாவே, நாங்கள் இங்கே வீணாக நின்று கொண்டிருக்கிறோம் என்பதை நாங்கள் உணருகிறதில்லை. இந்த ஆத்துமாக்களுக்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். அவர்களை இரட்சிக்க இப்பொழுது நீர் இங்கே இருக்கிறீர் என்பதை நாங்கள் அறிவோம். கர்த்தாவே, நீர் அதை அருள வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். அவர்களுடைய விசுவாசம் நிழலுக்கு அப்பால் நோக்கிப் பார்க்கப்படுவதாக. பரிசுத்த ஆவியைத் தேடிக்கொண்டிருக்கிற இவர்கள், அதைப் பெற்றுள்ள விசுவாசிகள் கரங்களை இவர்கள்மேல் வைக்க, வியாதியஸ்தரும், அவதியுறுவோரும், தேவனுடைய வல்லமை இந்தக் கட்டிடத்திற்குள்ளும், மேலும் கீழும் இந்த நடைபாதைகளிலும் அசைவாடி, இந்த ஜனங்களினூடாக அசைவதாக. ஒவ்வொரு பாவியையும் இரட்சித்து, ஒவ்வொரு விசுவாசியையும் பரிசுத்த ஆவியினால் நிரப்பி, சுகவீனமான ஒவ்வொரு நபரையும் சுகப்படுத்தும். கர்த்தாவே, இந்தக் காரியங்களை அருளும். நீர் இங்கே இருக்கிறீர் என்றும், நீர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறீர் என்றும் நான் விசுவாசிக்கிறேன். உம்முடைய வாக்குத்தத்தங்கள் தவறிப்போக முடியாது.

229 நீர் உம்முடைய சபைக்குக் கட்டளையிட்டீர் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம், அவர்கள் எருசலேம் நகரத்திற்கு சென்றனர். அவர்கள் மேலறைக்குச் சென்று, தொடர்ந்து அங்கே தேவனைத் துதித்து, ஸ்தோத்தரித்துக் கொண்டிருந்தனர். "திடீரென்று வானத்திலிருந்து பலத்த காற்று அடிக்கிற முழக்கம் உண்டாகி, அவர்கள் கூடியிருந்த வீடு முழுவதையுமே நிரப்பினது." நீர் மாறாதவராயிருக்கிறீர், நீர் அதையே செய்ய வல்லவராயிருக்கிறீர். பெந்தெகொஸ்தே நாளில் இறங்கி வந்த வல்லமை, இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையில், இன்றிரவு இந்தக் கூட்ட ஜனங்களை அபிஷேகிப்பதாக. இந்த ஜனங்களுக்காக, தேவனுடைய மகிமைக்காக நான் இயேசுவின் நாமத்தில் இந்த ஜெபத்தை ஏறெடுக்கிறேன்.

230 இப்பொழுது உங்களுடைய கரங்களை உயர்த்துங்கள். விசுவாச ஜெபமும், மன்னிப்பின் விசுவாச ஜெபம் ஜெபிக்கப்பட்டிருக்கிறது. உங்களுடைய கரங்களை உயர்த்தி, "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று கூறுங்கள். அவரைத் துதித்து, அவரை ஸ்தோத்தரிக்கத் துவங்குங்கள். அப்படியே உங்களுடைய பாவங்களை அறிக்கை செய்யுங்கள். அறி...உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள். உங்களுடைய கரங்களைத் தேவனண்டை உயர்த்தி, "கர்த்தராகிய இயேசுவே, உமக்கு நன்றி. இந்த நிமிடத்தில், நீர் எனக்குக்

கர்த்தருடைய ஆவியை அளித்தீர் என்று நான் விசுவாசிக்கிறேன், நீர் என்னைப் பரிசுத்த ஆவியினால் அபிஷேகத்து, ஆசீர்வாதங்களை எனக்கு அளித்தீர்" என்று கூறுங்கள்.

சரி, சகோதரியே, வாருங்கள்...?... 

63-0113E விடாமுயற்சி
போர்ஸ்கொயர் சபை
பினீக்ஸ், அரிசோனா அமெரிக்கா

TAMIL

©2026 VGR, ALL RIGHTS RESERVED

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org

பதிப்புரிமை அறிவிப்பு

எல்லா உரிமைகளும் தனியாருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் தனிப்பட்ட உபயோகத்திற்கோ அல்லது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு ஒரு கருவியாக வெளியே விநியோகிக்கப்படவோ வீட்டில் பயன்படுத்தப்படும் மூலப்பிரதியிலிருந்து நகல் எடுக்கும் இயந்திரத்தின் மூலம் பிரதி எடுக்கலாம். இந்தப் புத்தகம் Voice Of God Recordings® நிறுவனத்தின் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட அனுமதி வெளியீடின்றி விற்கப்படவோ, பேரளவில் மீண்டும் அச்சிடப்படவோ, இணையதளத்தில் வெளியிடவோ, மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்ற முறையில் சேமித்து வைக்கப்படவோ, பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படவோ அல்லது நிதி திரட்ட வேண்டுகோள் விடுக்கும்படி உபயோகப்படுத்தவோ இயலாது.

மேலும் கூடுதலான விபரங்களுக்கு அல்லது கிடைக்கக்கூடிய மற்ற பிரதிகளுக்கு தயவுகூர்ந்து தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org